
**"சில்பாலோக்க வேலைத்திட்டம்"**

கல்விப் பொது தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

# அரசியல் விஞ்ஞானம்

# POLITICAL SCIENCE




**மாணவர் சுயக்கற்றலுக்கான கையேடு**

**தரம் 13**

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களுடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

***E.P.T.K ஏக்கநாயக்க***
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***A.R சத்தியேந்திரா***
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.L.M.சாருடீன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***வழிகாட்டல்***

***P. விக்னேஸ்வரன்***
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

*பிரதமநூலாசிரியர்*

***M.R.U ரில்வான் BA,***
***Dip. In Counseling, PGDE, M.Ed***
**உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**மாத்தளை வலயம்**
**Tel: 0777 802790, 071 780 2790**

**நூலாக்கள் குழு:-**

**K. B. பவ்மி (ஆ. ஆ)**
**வலயக்கல்வி காரியாலயம் - மாத்தளை**

**N. M. S. ஜெலீலா ஆசிரியர்**
**மா/அந்நூர் முஸ்லிம் வித்தியாலயம், வரக்காமுறை**

**A. L. M. சாதிகீன் ஆசிரியர்**
**மா/அல்மினா ஆரம்ப பாடசாலை - உக்குவளை**

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

## நூல் பற்றிய அறிமுகம்

மாணவர்களின் கவனத்திற்கு, மத்திய மாகாண கல்வித்திணைக்களத்தினால் க. பொ. த. (உ/த) மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானப் பாட சுயகற்றலுக்கான கையேடு பற்றிய சிறிய வழிகாட்டல் பின்வருமாறு.

- உயர்தர மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தரம் - 12, தரம் - 13 என வெவ்வேறாக தயாரிக்கப்பட்டுள்ளது.

- உயர்தர பரீட்சைக்காக தயாராவதற்கான வழிகாட்டல் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. இது முழுமையான விளக்கமோ விடைகளோ உள்ளடங்கியதல்ல என்பதனை கருத்தில் கொண்டு மேலதிக விளக்கங்களை தேடி கற்றுக்கொள்ள வேண்டும்.

- கடந்த கால வினா புத்தகங்கள் மற்றும் பாடநூல்களை அடிப்படையாகக் கொண்டு விடைகளை ஆயத்தப்படுத்தல் அவசியமாகும்.

- Covid - 19 விடுமுறைகளில் மாணவர்கள் வீட்டில் இருந்தவாறு சுயமாக கற்பதற்காக ஒரு வழிகாட்டலாகவே இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

- ஆசிரியர்களின் உதவியுடன் மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்வது அவசியம்.

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

# அலகு - 09

## ஜனநாயக ஆட்சிமுறை

ஜனநாயகம் (Democracy) என்ற சொல் மக்களாட்சியையே குறித்து நிற்கின்றது. Democracy என்ற ஆங்கிலச் சொல் Demos - People மக்கள் என்ற சொல்லும் Kratos - Power அதிகாரம் எனும் கிரேக்க சொல்லும் இணைந்தே உருவானதாகும். ஜனநாயகம் தொடர்பான எண்ணக்கரு கிரேக்க காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்தாலும் நவீன ஜனநாயக ஆட்சி முறைக்கு குறுகிய வரலாரே காணப்படுகின்றது. 17ஆம் நூற்றாண்டில் அரசாட்சிமுறைக்கு மாற்றீடாக பிரித்தானியாவில் இம்முறை தோற்றம் பெற்றது.

ஜனநாயகம் தொடர்பான அறிஞர்களின் கருத்து

- கார்ணர் - Garnar
  சனநாயகம் என்பது ஓர் அரசாங்க முறையாகும். இது இறைமை அதிகாரத்தினை மக்கள் தமக்கிடையில் பகிர்ந்துகொள்கின்ற உரிமைகளை வழங்குகின்ற ஒன்றாகும்.

- டுவேஜர் - **Duverger**
  ஒரு சுதந்திரமான கட்டுப்பாடற்ற தேர்தல் மூலமாக ஆளப்படுவோர் ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும்.

- சம்பீட்டர் - **Schuimpeter**
  சனநாயகம் என்பது மக்களுடைய வாக்குகளைப் பெற்று அரசியல் முடிவெடுக்கும் அதிகாரத்தினை சிலர் பெறுவதற்காக உள்ள நிறுவன அமைப்புகளைக் கொண்ட முறையாகும்.

இந்த வகையில் ஜனநாயகம் என்பதனை இரு பொருள்களில் விளக்கலாம்.

(m) ஒரு அரசாங்கம் பற்றிய தத்துவம்:-
மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் மக்களுக்காக சட்டதிட்டங்களை இயற்றி மக்களுக்காக ஆட்சி செய்வதை சனநாயக அரசாங்கம் என்பர். ஆப்ரகாம் லிங்கன் இதனையே “மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களின் அரசாங்கம்” என்றார்.

(M) ஒரு சமூகத் தத்துவம்:-
மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொடுத்தும், அதனை பாதுகாத்தும் மக்களின் பொதுத்தேவைகளை நிறைவேற்றவும் செயற்படுகின்ற வகையில் செயற்படும் ஓர் சமூக நலன்பேண் அமைப்பாகும்.

ஜனநாயகத்தை நேரடி ஜனநாயகம், மறைமுக அல்லது பிரதிநிதித்துவ ஜனநாயகம் என இரண்டாக வகைப்படுத்தலாம்.

நேரடி ஜனநாயகம்:-
புராதன கிரேக்கத்தில் நேரடி ஜனநாயகத்தின் பண்புகளை காணலாம். நேரடி ஜனநாயகம் என்பது ஆட்சியில் மக்கள் நேரடியாக பங்குபற்றுவதனைக் குறிக்கும். புராதன கிரேக்கத்தின் முக்கிய நகரங்களான எதன்ஸ், ஸ்பாட்டா ஆகிய நகராட்சியை நேரடி ஜனநாயகத்துக்கு உதாரணங்களாக குறிப்பிடலாம். அந்நகரங்களில் வாழ்ந்த மக்கள் ஒரு பொது இடத்தில் கூடிய நகராட்சியின் பொதுப்பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானங்களை எடுப்பதன் மூலம் ஆட்சி விடயங்களில் பங்குபற்றினர். இதனையே நேரடி ஜனநாயகம் என்கின்றனர். அரசியல் விடயங்களில் சகல வயது வந்த ஆண்களும் பங்குபற்றினாலும் சிறுவர்கள், பெண்கள் அடிமைகள், வெளிநாட்டவர் ஆகியோர்களுக்கு அரசியலில் பங்குபற்றும் உரிமை காணப்படவில்லை.

கிரேக்கத்தில் நேரடி ஜனநாயகம் சிறப்பாக நடைபெறுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

குறைந்த மக்கள் தொகை:-
கிரேக்க நகர அரசுகளில் மக்கள் தொகை மிக சிறிய அளவிலேயே காணப்பட்டது. பிளேட்டோ, மற்றும் அரிஸ்டோட்டலின் கருத்துப்படி 5000 - 10000 க்கும் இடைப்பட்டதாக இருந்தது. மக்கள் அரசியலில் நேரடியாக பங்குபற்ற குறைந்த மக்கள் தொகை சாதகமாக விளங்கியது.

சிறிய நிலப்பரப்பு:-
கிரேக்க நகர அரசுகள் மிக சிறிய நிலப்பரப்பை உடையதாக விளங்கின. அரசு ஒரு நகர அமைப்பை கொண்டிருந்தமையால் அவை "நகர அரசுகள்" ஊவைல ளுவயவந என அழைக்கப்பட்டன. மக்கள் வந்து ஒன்றுகூடுமளவு சிறியதாக அமைந்திருந்தன.

முரண்பாடற்ற சமூகம்:-
கிரேக்க நகர அரசு மக்களிடையே சாதி, சமய, இன, வர்க்க வேறுபாடுகள் பெருமளவில் காணப்படவில்லை. அவர்கள் ஒரே இனத்தவர்களாகவும், குறிப்பிட்ட சில தொழில்களை செய்பவர்களாகவும் விளங்கினர்.

தாராண்மைவாதம் மற்றும் கருத்துக்களை மையமாக கொண்டு தோற்றம் பெற்ற தாராண்மைவாத சனநாயகம் மற்றும் மக்களாட்சி என்ற எண்ணக்கருவை கொண்டு உருவானதே பிரதிநிதித்துவ சனநாயகமாகும். மக்களின் சுதந்திரம் உரிமைகளை தாராளமாக வழங்குதல், மக்களின் விருப்பப்படி மக்களை பிரதிநித்துவபடுத்தும் ஆட்சி என்பதே இதன் கருவாகும்.

பிரதிநிதித்துவ சனநாயகம்
17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில், ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தோன்றி வளர்ச்சியடைந்த முறையாக பிரதிநிதித்துவ சனநாயகத்தை குறிப்பிடலாம். இம்முறை தோற்றம் பெறுவதற்கு கிரேக்கத்தில் நிலவிய நேரடி சனநாயக முறையே அடிப்படையாக விளங்கியது. தற்கால நவீன அரசுகளில் பரந்த நிலப்பரப்பு, அதிகரித்த சனத்தொகை, ஒன்று கூடுவதில் உள்ள சிக்கல்கள், அரசியலுடன் தொடர்புடைய மக்களின் சிந்தனை மற்றும் பிரச்சினைகள் அதிகரித்துச் செல்லல் போன்ற காரணிகளால் நேரடி சனநாயக முறை சாத்தியமற்றதாகியது.

பிரதிநிதித்துவ சனநாயக முறையில் மக்கள் மறைமுகமாகவே ஆட்சியில் பங்குபற்றுகின்றனர். தங்களுக்காக செயற்பட பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்புகின்றனர். மக்கள் சார்பாக தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தொழில்சார் அரசியல்வாதிகள் குழுவொன்றிடம் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதால் பிரதிநித்துவ சனநாயக முறையினை தேர்தல் சனநாயகம் எனவும் அழைப்பர். பிரஜைகளின் பங்குபற்றல் மற்றும் பொறுப்பு கூறலை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் முறைகளின் மூலம் சில நியதிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

சனநாயக ஆட்சியும் அதன் இயல்புகளும்

(1) யாப்புவாதம்
யாப்புவாதம் என்பது அரசியல் திட்டத்திற்குட்பட்ட ஆட்சி நடைபெறுதல் என சுருக்கமாக குறிப்பிடலாம். யாப்பின் ஊடாக வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தினை நடைமுறைப்படுத்துவதாகும். அரசியல் அமைப்பானது அராங்கத்தை வழிநடத்தும் சட்டமாகும். எனவே சர்வதிகாரம் ஏற்படுவதை தடுக்கும் வகையிலான தடைகளை யாப்பு ரீதியாக மேற்கொள்ளல் என்பதே யாப்புவாதம் என்பதன் பொருளாகும். அதாவது அரசியல் திட்டத்திற்கமைய ஆட்சி நடைபெறுதலாகும்.

(2) மக்கள் இறைமை
மக்கள் இறைமை என்பதன் பொருள் அரச அதிகாரத்தின் மூலாதாரம் மக்கள் என்பதாகும். மக்களே அரசாங்கத்தை அமைக்கவும் மாற்றவும் அதிகாரம் படைத்தவர்கள். மக்களின் விருப்பத்தின் படியே அரசாங்க செயற்பாடுகள் நடைபெற வேண்டும். எனவே சனநாயக அரசாங்கம் என்பது மக்களால் உருவாக்கப்படுவதும் மக்களின் விருப்பத்திற்கமைய செயற்படக்கூடியதுமாகும்.

(3) அதிகார வேறாக்கம்
அரசாங்கத்தின் அதிகாரங்கள் ஓரிடத்தில் ஒன்றுகுவிக்கப்பட்டிருக்கும் இடத்து அங்கு பூரண சுதந்திரத்தை எதிர்பார்க்க முடியாது எனவும் அதிகார வேறாக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கும்போது சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பன தனித்தனியாகவும் சுதந்திரமாகவும் செயற்பட வாய்ப்பு கிடைப்பதால் அங்கு சர்வாதிகாரம் ஏற்படுவதை தடுக்கலாம் என்ற கருத்தை மொன்டஸ்கிய முன்வைக்கின்றார்.

(4) சமநிலைத் தலையீடுகள்.
சமநிலைத் தலையீடுகள் எனும்போது சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறைகளின் அதிகாரங்கள் சமநிலையாக காணப்பட வேண்டும் என்பதாகும். அவை தமது அதிகார எல்லையை மீறி செயற்படும்போது ஏனைய துறைகள் தடைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதாகும். இவ்வாறு அரசாங்கத்தின் பிரதான துறைகளான சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை தத்தமது பணிகளை சுதந்திரமாகவும் தடைகளின்றியும் செயற்படும் போது சர்வாதிகாரம் உருவாவது கட்டுப்படுத்தப்படுகின்றது. இது சனநாயக ஆட்சிக்கு அடிப்படையாக அமைகின்றது.

(5) rl;lj;jpd; Ml;rp
சட்டவாட்சி என்பது சமூகத்தில் சகலரும் சமமாகும் என்பதாகும். அதாவது ஆள்வோரும் ஆளப்படுவோரும் சட்டத்தின் முன் சமமாக நோக்கப்பட வேண்டும் என்பதாகும். ஒரு நாட்டில் சடடம் சகலருக்கும் சமமாக இயங்கும் போது நீதி, நியாயம் மற்றும் சமத்துவம், சுதந்திரம் பாதுகாக்கப்படும். எனவே சட்டவாட்சியானது சனநாயகத்தின் மற்றுமொரு பிரதான பண்பாக குறிப்பிடலாம்.

(6) அடிப்படை உரிமைகள்
சனநாயக நாட்டில் சகலரும் உரிமைகளை பெற்று வாழ வழிவகை காணப்பட வேண்டும். மனித உரிமைகள் என்பது எல்லா மனிதர்களும் கௌரவமான வாழ்க்கையினை வாழுவதற்கும் ஆளுமையை முழுமையாக விருத்தி செய்து கொள்வதற்கும் மற்றும் சமூக நீதிக்கும் வழி ஏற்படுத்தும் ஒழுக்கம் சார் உரிமைகளாகும். இந்த வகையில அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரம், சமத்துவம் என்பதும் சனநாயக ஆட்சியின் அடிப்படை பண்பாக காணப்படுகின்றது.

(7) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்
சனநாயக ஆட்சியில் தேர்தல்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்த வகையில் அரசாங்க நிறுவனங்களுக்கான சகல தேர்தல்களும் நீதியாகவும், நியாயமாகவும் மற்றும் ஊழல்கள் இன்றி உரிய காலப்பகுதிகளில் சுதந்திரமாக நடைபெற வேண்டும். சகல பிரஜைகளுக்கும் சமத்துவமாக வாக்குரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதன்போது அரசியல் தலையீடகள் இடம்பெற கூடாது.

(8) மக்களுக்குப் பொறுப்பு கூறும் அரசாங்கம்
மக்களுக்கு பொறுப்புகூறல் சனநாயக ஆட்சிமுறையில் பிரயோக ரீதியான அம்சமாக கருதலாம். ஏதேனும் ஒரு பதவியில் அல்லது பொறுப்பில் இருக்கும் ஒருவர் தன்னுடைய நடத்தை தொடர்பில் பொதுமக்களுக்கு பதிலளிக்க கடமைப்பட்டுள்ளார் என்பதே இதன் கருத்தாகும். சனநாயக அரசியல் முறையொன்று செயற்படும்போது, அரச பதவிகளை வகிப்போர் தமது தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் மக்களுகபு பதில கூற வேண்டியது கட்டாயமாகும்.

# சனநாயக அரசாங்கத்தின் பண்புகள்

(அ) மக்கள் இறைமை அதிகாரத்தைப் பெற்றிருத்தல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(ஆ) அரசாங்கம் சட்டமுறையாக தெரிவு செய்யப்பட்டிருத்தல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(இ) அரசியல் திட்டத்தை கொண்டிருத்தல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(ஈ) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறுதல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(உ) மக்கள் பிரதிநிதிகளால் ஆட்சி நடைபெறல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(ஊ) போட்டிகரமான அரசியல் கட்சி முறை நிலவுதல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(எ) சட்டத்தின் ஆட்சி நடைபெறுதல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(ஏ) நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டிருத்தல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(ஐ) பிரஜைகளின் உரிமைகளும், சுதந்திரமும், சமத்துவமும் பாதுகாக்கப்பட்டிருந்தல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(ஒ) சுதந்திரமான ஊடகத்துறை காணப்படுதல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(உ) மக்கள் பிரதிநிதிகளால் ஆட்சி நடைபெறல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(ஓ) பொறுப்புக்கூறல்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

## சனநாயக சமூகத்தில் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தின் முக்கியத்துவம்

சனநாயக ஆட்சி முறைக்கு சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியன அடிப்படைத் தத்துவங்களாக காணப்படுகின்றன. அரசின் உறுப்பினர் என்ற வகையில் அல்லது அரசியல் சமூகமொன்றின் உறுப்பினர் என்ற வகையில் பிரஜைகள் அனுபவிக்க விரும்பும் அடிப்படை உரிமைகளாகும். பிரஜைகளுக்கு சுதந்திரம், சமத்துவம் மற்றும் ஏனைய உரிமைகளை உறுதி செய்யும் ஓர் அரசியல் முறைமையே ஜனநாயகமாகும். எந்தவொரு சமூகத்திலும் பிரஜைகளின் அரசியல் வாழ்க்கையின் தரத்தினை அவர்கள் அனுபவிக்கும் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தினைக் கொண்டு வினைத்திறன்மிக்க வகையில் மதிக்கப்பிட முடியும்.

- தனிநபரின் சமாதான வாழ்க்கைக்கும், சிந்திக்கும் மற்றும் செயற்படும் சுதந்திரத்தினை பாதுகாக்கவும், சுதந்திரம் அத்தியாவசியமாகும்.
- ஜனநாயக சமூகமொன்றில் தனிமனித சுதந்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை. எனினும் சட்ட ஒழுக்க மற்றும் சமூக கடடுப்பாடுகளுக்கு உள்ளாகின்றது. ஏனையோருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சுதந்திரத்தினை பயன்படுத்த முடியாது.
- பிரஜைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது சனநாயக அரசாங்கத்தின் கடமையாகும். இதற்காக அரசியல் யாப்பில் உரிமைகளை உட்படுத்துதல், சட்டவாட்சியை நடைமுறைப்படுத்துதல், பொருளாதார, நீதி, நீதித்துறை சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் என்பவற்றை உறுதிச் செய்தல்.
- சமத்துவம் எனும்போது சமூகத்தில் சகலரும் சமமானவர்கள் என்பதாகும். சகலரும் சமமான உரிமைகளுக்கு உரித்துடையவர்கள். எனவே மக்களிடையே இன, பால், சாதி, சமய, வேறுபாடுகளின்றி சமத்துவம் பேணப்படும் போது ஜனநாயகம் பாதுகாக்கப்படுகின்றது.
- சமூக சமத்துவத்தினை உறுதி செய்வதற்கு பின்வரும் நிபந்தனைகளை அடைவது அவசியமாகும். இந்த வகையில் சிலருக்கு மாத்திரம் விஷேட கவனிப்பு இருக்கக் கூடாது. யாவருக்கும் சமமான வாய்ப்பு காணப்படுதல், யாவருக்கும் சமமான உரிமை காணப்படுதல் அவசியமாகும்.

ஜனநாயக சமூகத்தின் சிறந்த செயற்பாட்டுக்கு சமத்துவம், சுதந்திரம் இன்றியமையாத காரணிகளாகும். மனித சுதந்திரத்தையும், சமத்துவத்தினையும் பெற்றுக்கொடுக்க ஜனநாயகம் முயற்சி செய்கின்றது. எனினும் தனிநபர்களின் முழு அளவிலான சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் உறுதிசெய்ய முடியாது. அதற்காக பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

குறிப்பு:-
இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள குறிப்புக்கள் வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும். இங்கு தரம் 13 பாடதிட்டத்திலுள்ள அலகுகளில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பாட அலகு தொடர்பாக மேலதிகமாக மேலும் தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்
- கடந்த கால அரசியல், விஞ்ஞான வினாவிடை புத்தகம்
- புள்ளியிடும் திட்டம் - இலங்கை பரீட்சைத் திணைக்களம், G. C. E. (A/L) அரசறிவியல்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, தரம் 3 – தேசிய கல்வி நிறுவகம்.
- அரசறிவியல்

பயிற்சி வினாக்கள்
1. ஒரு சனநாயக அரசின் பண்புகளை வரையறை செய்க. – 2006
2. ஜனநாயக ஆட்சியில் பின்வருவனவற்றின் வகிபங்கு – 2016
   (i) சிவில் சமூகம் (ii) நல்லாட்சி
   (iii) வெகுசனஊடகம் (iv) அரசியல் கட்சிகள்
3. நேரடி சனநாயகம் என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்தி, அதன் பண்புகளை விளக்குக.
4. சனநாயக அரசாங்கத்தின் பண்புகளை சர்வாதிகார அரசுடன் ஒப்பிட்டு விமர்சனம் செய்க.
5. சனநாயக ஆட்சியின் பிரதான இயல்புகள் இரண்டை விளக்குக.

## பகுதி – **B**

1. புராதன கிரேக்கத்தில் நேரடி சனநாயகம் நிலவிய இரண்டு கிரேக்க நகர அரசுகளை பெயரிடுக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
2. நேரடி சனநாயக அரசின் பண்புகள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
3. நேரடி சனநாயக ஆட்சிக்கு சாதகமாக நிலவிய இரண்டு காரணிகளைத் தருக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
4. சனநாயக ஆட்சியின் இரு பிரதான இயல்புகளை தருக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
5. சனநாயக அரசில் இரு அரசியல் உரிமைகளை பெயரிடுக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
6. சட்ட ஆட்சி மற்றும் அதிகார வேறாக்க கோட்பாட்டாளர்கள் இருவரை முறையே பெயரிடுக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
7. நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் என்பதனை இரு பதங்களில் விளக்குக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
8. சனநாயக, அரசுகளில் நடைமுறைப்படுத்தப்படும் இரு பிரதான பிரதிநிதித்துவ முறைகளை பெயரிடுக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
9. சனநாயக அரசாங்கமொன்றில் மக்கள் அடையும் நன்மைகள் இரண்டைத் தருக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………
10. சனநாயக அரசுகளில் காணப்படும் குறைப்பாடுகள் 2 தருக.
   (i) ……………………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………………

பத்திப் பாடசாலை கல்வித்திணைக்களம்

# அலகு - 10

## அரசியல் அமைப்பு மாதிரிகள்

தற்கால உலகில் பல்வேறு வகையான அரசியல் அமைப்பு மாதிரிகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி முறைகள் பிரதானமானவைகளாகும். அமெரிக்கா, இந்தியா, சுவிட்சர்லாந்து, பிரித்தானியா, இலங்கை, பிரான்ஸ் என்பன எமது பாடத்திட்டத்திட்குட்பட்ட சில நாடுகளாகும். இந்நாடுகளின் நடைமுறை அரசியல் அமைப்பு மாதிரிகளை பிரதானமாக மூன்று வகைகளாக பிரித்து ஆராயலாம்.

1. சம்'டி மாதிரி
(i) அமெரிக்க முறை
(ii) இந்திய முறை
(iii) சுவிட்சர்லாந்து முறை

2. ஒற்றையாட்சி மாதிரி
(i) பிரித்தானியா
(ii) இலங்கை

3. ஒற்றை மற்றும் மத்தியமயமாக்கப்பட்ட மாதிரி
(i) பிரான்ஸ்

### 1. சம்'டி மாதிரி

சமஷ்டி ஆட்சி முறைக்கு சிறந்த உதாரணமாக அமெரிக்காவை குறிப்பிடலாம். இந்திய சமஷ்டி முறை இந்தியாவுக்கே உரிய முறைமையை உடையதாகும். அவ்வாறே சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையும் சில விஷேட பண்புகளை உள்ளடக்கியுள்ளது.

**(i)** அமெரிக்க சம்'டி முறை

ஐக்கிய அமெரிக்கா 50 மாநிலங்களை உள்ளடக்கிய ஒரு சமஷ்டி நாடாகும். 9372614 சதுர km நிலப்பரப்பையும் (311 மில்லியன்) சனத்தொகையையும் உடையதாகும்.

1776இல் ஜீலை 4ஆம் திகதி பிரித்தானியாவிடமிருந்து அமெரிக்கா சுதந்திர பிரகடனத்தை மேற்கொண்டது. அதன் பின்னர் 13 குடியேற்ற நாடுகளுடனும் சேர்ந்து 1787இல் அமெரிக்க சமஸ்டி அரசியல் யாப்பை உருவாக்கியது. 1789ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதியிலிருந்து அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. அன்று முதல் இன்று வரை சுமார் 230 வருடங்களுக்கும் மேலாக நடைமுறையில் இருப்பதுடன் இதுவரை 27 தடவைகள் திருத்தங்களுக்குட்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 13 சமஷ்டியரசுகளுடன் ஆரம்பமான கூட்டாட்சி தற்போது 50 மாநிலங்களை உள்ளடக்கியுள்ளது.

அமெரிக்க அரசியல் அமைப்பின் பொது இயல்புகள்

- அமெரிக்க சமஷ்டி அரசியல அமைப்பு எழுதப்பட்ட நெகிழா அரசியல் திட்டமாகும். மேலும் இது காங்கிரஸ் சட்டமூலம், வழக்காறுகள், நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் போசிக்கப்பட்டுள்ளது.
- வழமைகள் மற்றும் மரபுகள் அரசியல் அமைப்பினை ஆக்கியோர் எதிர்கால செயற்பாட்டுக்குத் தேவையான சட்டத்தை மாத்திரமே உருவாக்கியுள்ளனர். அதற்கான அமைப்பு, பண்பாடுகள், வழமைகள், மரபுகள் மூலமே கிடைக்கப்பட்டுள்ளது.
- நெகிழா அரசியல் திட்டமாகும். அதனை திருத்துவதாயின் காங்கிரசில் இரு சபைகளிலும் 2/3 பெரும்பான்மையும், மாநிலங்களின் 3/4 சம்மதமும் அவசியமாகும்.
- சமஷ்டி அரசியல் முறை. அமெரிக்கா 13 மாநில அரசுகளில் ஆரம்பித்து தற்போது 50 மாநிலங்கள் வரை வியாபித்துள்ள சமஷ்டி குடியரசாகும்.
- அதிகார வேறாக்க கொள்கையை கடைப்பிடித்து யாப்பு உருவாக்கப்பட்டிருப்பதோடு தடைகள் சமநிலை கோட்பாடும் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- உரிமைகள் பிரகடனம் மூலம் அடிப்படை உரிமைகள், சொத்துக்கள், மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளது.
- நீதிப் புனராய்வு (Judicial Review) அதிகாரம் நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- அமெரிக்க அரசியல் அமைப்பு மக்கள் இறைமை எனும் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆட்சி செய்யும் அதிகாரம் மக்களிடமேயுள்ளது என்பதே இதன் பொருளாகும்.

- நிறைவேற்றுத்துறைக்கு மக்களால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி 4 வருடங்கள் பதவிக்காலத்தை உடையவர். இவரே முழுநாட்டினதும் நிருவாகத்துக்கு பொறுப்பாக விளங்குகின்றார்.
- அமெரிக்க பிரஜைகள் மத்திய அரசினதும், மாநில அரசுகளிலும் பிரஜைகள் என்ற வகையில் இரட்டைக் குடியுரிமை பெற்றுள்ளனர்.

அமெரிக்க மத்திய அரசின் அதிகாரங்கள்

அமெரிக்க அரசியல் அமைப்பு மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பவற்றின் அதிகாரங்களை குறிப்பிட்டுள்ளதுடன் யாப்பின் முதலாம் அத்தியாயத்தின் எட்டாம் பிரிவின் 3ஆம் உப பிரிவின் கீழ் பின்வரும் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது.

1. உயரியத் தன்மை சார்ந்த விதிமுறைகள்
2. போர் தொடர்பான அதிகாரங்கள்
3. வர்த்தகம் தொடர்பான விதிமுறைகள்
4. வரி அறவிடல், செலவு செய்தல் தொடர்பான அதிகாரங்கள்.

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

# இந்திய சம்'டி முறை

இந்தியா நிலப்பரப்பிலும் சனத்தொகையிலும் மிகப் பெரிய நாடாக காணப்படுகின்றது. இந்திய சமஷ்டி முறை இந்தியாவுக்கேயுரிய தனித்துவத்தினைப்பெற்று விளங்குவது அதன் சிறப்பம்சமாகும். இந்திய அரசியல் அமைப்பு 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி உருவாக்கப்பட்டதாகும். இது 395 உறுப்புரைகளையும் 09 அத்தியாயங்களையும் உடைய மிகப் பெரிய யாப்பாகும். இந்திய மத்திய அரசாங்கத்தையும் 29 பிராந்தியங்களையும் (மாநிலங்களையும்) 07 யூனியன் பிரதேசங்களையும் உள்ளடக்கியதாகும்.

பிராந்திய அரசாங்கங்களுக்கும் - யூனியன் பிரதேசங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. மாநில அரசுகளுக்கு யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள சமஷ்டி முறையில் காணப்படும் சுயாதீனத் தன்மை உண்டு. அவற்றில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றமும் அமைச்சரவையும் காணப்படும். மாநில ஆளுநர் மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் மாநில அரசின் நிறைவேற்று நிருவாகம் தொடர்பில் ஆளுநருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களே காணப்படுகின்றன. எனினும் யூனியன் பிரதேசங்களை மத்திய அரசே நிருவகிக்கும். ஏழு யூனியன் பிரதேசங்களில் ஐந்து மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் சட்டமன்றங்கள் இல்லை. எனினும், டில்லி, புதுச்சேரி எனும் யூனியன் பிரதேசங்கள் இரண்டிலும் சட்டமன்றங்களும் நிறைவேற்று நிருவாகத்துக்குப் பொறுப்பான அமைச்சரவையும் உண்டு. மத்திய அரசின் பிரதிநிதியாக நிறைவேற்று ஆளுனர் செயற்படுவார்.

இந்திய சம்'டி முறையின் பண்புகள்

இந்திய அரசியல் அமைப்பின் முதலாம் சரத்து இந்தியா ஒரு சமஷ்டி அரசு என குறிப்பிடுகின்றது. அத்தோடு மாநில அரசுகளை தோற்றுவித்தல், மத்திய மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் என்பன தெளிவாக காட்டப்பட்டுள்ளன.

இந்திய யாப்பின் 7 ஆவது அட்டவணை மத்திய அரசுப் பட்டியல், மாநிலப்பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று அதிகாரப் பட்டியல்கள் இடம் பெறுகின்றன.

(அ) எழுதப்பட்ட அரசியல் அமைப்பு

இந்திய அரசியல் அமைப்பு உலகிலேயே மிக நீண்ட யாப்பாகும். அது 395 உறுப்புரைகளையும் 9 அனுபந்தங்களையும், 3 பின்னிணைப்புகளையும் உள்ளடக்கிய 403 பக்கங்களையும் உடையதாகும். இதுவரை 101 திருத்தங்களையும் (2017.07.01) கொண்டதாகும்.

(ஆ) யாப்பின் நெகிழ்ச்சித்தன்மை

ஒரு அரசியல் யாப்பின் நெகிழும், நெகிழாத் தன்மையானது அது திருத்தப்படும் முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இந்திய யாப்பு பின்வரும் மூன்று முறைகளின்படி திருத்தப்படுகின்றது.

- ➢ பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் மட்டும் திருத்தக்கூடிய உறுப்புரைகள்.
- ➢ பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் வெவ்வேறாக விஷேட பெரும்பான்மையின் 2/3 மூலமும் அல்லது மாநில அரசுகளுள் அரைவாசிக்கு மேற்பட்ட அரசுகளின் அங்கீகாரத்தோடும் திருத்தக்கூடிய உறுப்புரைகள்.
- ➢ பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் விஷேட பெரும்பான்மையின் (2/3) மூலம் திருத்தப்படக்கூடிய உறுப்புரைகள்.

இதன்படி இந்திய அரசியல் அமைப்பின் சில பகுதிகள் நெகிழக்கூடியதாகவும், சில பகுதிகள் நெகிழாத் தன்மையுடையதாகவும் காணப்படுகின்றது.

(இ) அரசியல் அமைப்பின் உயர்தன்மை

இந்திய எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் உயர்சட்டம் அரசியல் அமைப்புச் சட்டமாகும். மத்திய - மாநில அரசாங்கங்களுக்கு அச்சட்டத்தின் மூலமே அதிகாரங்கள் கிடைக்கப் பெறுகின்றன இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மேலால் வேறு எந்தச் சட்டமும் இந்தியாவில் காணப்படமாட்டாது.

(ஈ) மத்திய - மாநில அரசாங்கங்களுக்கிடையில் அதிகாரம் பங்கிடப்பட்டிருத்தல்
மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசுகளுக்கும் இடையில் அரசியல் அமைப்பின் அதிகாரப் பட்டியல்களின் மூலம் அதிகாரங்கள் பங்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்திற்கு 97 விடயங்கள் தொடர்பாகவும், மாநிலங்களுக்கு 66 விடயங்களை தொடர்பாகவும், பொதுப்பட்டியலில் மத்திய - மாநில அரசாங்கங்கள் இரண்டுக்கும் 47 விடயங்களுமாக அதிகாரங்கள் பங்கிடப்பட்டுள்ளது.

(c) அரசியல் யாப்பினை பாதுகாக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு வழங்கப்பட்டிருத்தல்:-
நீதித்துறை நீதிப்புனராய்வு அதிகாரத்தைப் பெற்றிருந்தால் மட்டுமே நீதித்துறை அரசியல் அமைப்பின் பாதுகாவலனாக செயற்பட முடியும். அரசியல் அமைப்பின் மூலம் இவ்வதிகாரம் நீதித்துறைக்கு வழங்கப்படாவிட்டாலும் உயர்நீதிமன்றம் அவ்வதிகாரத்தைப் பிரயோகிப்பதோடு அதன்படி மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் பிறப்பிக்கும் சட்டங்கள் யாப்புக்கு முரணானதாயின் அவற்றை செல்லுபடியற்றதாக ஆக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உள்ளது.

(C) மத்திய அரசாங்கத்தில் மாநில அரசாங்கங்களுக்குப் பிரதிநித்துவம் கிடைக்கப் பெறல்
சமஷ்டி முறை நிலவும் நாடுகளில் மத்திய அரசாங்கத்தில் மாநிலங்களைப் பிரதிநித்துவப்படுத்துவதற்காக மத்திய அரசின் சட்டமன்றம் இரண்டு சபைகளை உள்ளடக்கியிருப்பதோடு இரண்டாம் மன்றம் மாநிலங்களைப் பிரதிநித்துவப்படுத்தும். இதற்காக இந்தியாவில் 250 உறுப்பினர்களை உள்ளடக்கிய இராஜ்ய சபா தாபிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் போன்று இந்தியாவில் மாநிலங்களுக்கு சமபிரதிநித்துவம் வழங்கப்படாவிட்டாலும் சமஸ்டி முறையின் ஒரு அவசியப்பாடு என்ற வகையில் மத்திய அரசாங்கத்தில் மாநிலங்களைப் பிரதிநித்துவப்படுத்துவதற்கான அதிகாரங்கள் இந்தியாவிலும் உண்டு.

(V) ஒற்றையாட்சிப்பண்பு கலந்த சம்ஷ்டி முறையாக இருத்தல்:-
இந்திய அரசியல் யாப்பு ஒற்றையாட்சிப் பண்புகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. அரசியல் யாப்பின் மூலம் மத்திய அரசுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாதாரண காலங்களில் சமஷ்டியாகவும் அவசரகால நிலைகளில் ஒற்றை முறையாக மாறும் இயல்புகளை கொண்டிருக்கின்றது. ஒத்தியங்கும் பட்டியலில் உள்ள அதிகாரங்கள் மத்திய அரசுகள் கைகளுக்கு மாறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் போன்ற காரணிகளின் அடிப்படையில் இந்திய சமஷ்டி ஒற்றையாட்சிப் பண்புகளை தாங்கியிருக்கின்றது.

## சுவிட்சர்லாந்து

உலகின் தலைசிறந்த சனநாயக நாடான சுவிட்சர்லாந்து மத்திய ஐரோப்பாவில் அமைந்துள்ள ஒரு சிறி நாடாகும். 73 இலட்சம் சனத்தொகையையுடை சுவிட்சர்லாந்து 41,285 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் உடையதாகும். இங்கு ஜேர்மன், பிரஞ்சு, இத்தாலி, ரோம மொழிகளை பேசுகின்ற மக்கள் வாழ்க்ன்றனர். இவ்வாறு வேறுபட்ட மொழிகளை பேசுகின்ற மக்கள் வாழ்ந்தபோதிலும் இவர்கள் ஒற்றுமையாக வாழ்கின்ற அமைதியான நாடாகும்.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற அரசியல் அமைப்பு 1874இல் கொண்டுவரப்பட்டதாகும். இவ் யாப்பு 123 சரத்துக்களை உள்ளடக்கிய சமஷ்டி யாப்பாகும். சுவிட்சர்லாந்து 20 முழு கன்டன்களையும் (Cantons கோட்டங்கள் அல்லது மாநிலங்களையும்) 06 அரை கன்டன்களையும் கொண்ட ஒரு கூட்டாட்சிக் குடியரசாகும்.

சுவிட்சர்லாந்து அரசயில் அமைப்பின் பண்புகள்

(i) எழுதப்பட்ட நெகிழா அரசியல் அமைப்பு:-
சுவிட்சர்லாந்து அரசியல் அமைப்பு எழுதப்பட்டதாகும். மூன்று பெரிய பிரிவுகளையும் 12 சரத்துக்களையும் உள்ளடக்கியதாகும்.

மேலும் அவ் யாப்ப நெகிழா அரசியல் அமைப்பாகும். ஒரு அரசியல் அமைப்பு திருத்த மசோதாவுக்கு கூட்டாட்சி பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் (தேசிய சபை, மாநிலங்கள் சபை) தனித்தனியே பெரும்பான்மை ஆதரவும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் சம்மதமும் அவசியமாகும்.

(ii) கூட்டாட்சி அரசியல் அமைப்பு
சுவிட்சர்லாந்து ஒரு சமஷ்டி நாடாகும். மத்திய அரசுக்கும், மாநிலங்களுக்கும் (கன்டன்கள்) இடையே அதிகாரங்கள் அரசியல் அமைப்பின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுக்கு பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், தொடர்பாடல், நிதி, சுங்க நடவடிக்கை, வெளியீட்டு உரிமை போன்றவையும் மாநிலங்களுக்கு கல்வி, பெருந்தெருக்கள், கைத்தொழில், தொற்றுநோய்த்தடுப்பு, வங்கி நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

(iii) கூட்டாட்சிக்குழு - குநனநசயட ஊழரஉெடை
சுவிட்சர்லாந்தில் நிர்வாக அதிகாரம் தனிநபர் ஒருவரிடம் வழங்கப்படாமல் ஏழு பேர் அடங்கிய கூட்டாட்சிக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(iv) கூட்டாட்சி பாராளுமன்றம; **- Federal Assembly**
சுவிட்சர்லாந்து பாராளுமன்றம் கூட்டாட்சி பேரவை அல்லது கூட்டாட்சி பாராளுமன்றம் என அழைக்கப்படுகின்றது. இப்பாராளுமன்றம் தேசிய சபை, மாநிலங்கள் சபை என இரு சபைகளை உள்ளடக்கியத.

(v) கூட்டாட்சி நீதிமன்றம்:-
சுவிட்சர்லாந்தின் தலைமை நீதிமன்றமாக கூட்டாட்சி நீதிமன்றம் விளங்குகின்றது. இந்நீதிமன்றம் அரசியல் அமைப்பின் பாதுகாவலனாகவோ, அரசியல் அமைப்பு விதிகளுக்கு விளக்கம் வழங்கும் அதிகாரத்தையோ பெறவில்லை. ஆனால் மாநிலங்கள் இயற்றும் சட்டங்கள் தொடர்பாக தீர்ப்பு கூற அதிகாரம் பெற்றுள்ளது.

## சுவிட்சர்லாந்து சம்'டி முறையின் இயல்புகள்

சுவிட்சர்லாந்து அரசியல் அமைப்பிற்கமைய அந்நாட்டின் கூட்டாண்மை அரசியல் அமைப்பே செயற்படுகின்றது. பிரான்சிய ஆக்கிரமிப்பு. நவீனமயமாதலின் தாக்கங்கள் போன்ற வரலாற்று ரீதியான தாக்கங்கள் காரணமாக இந்நாட்டில் காணப்பட்ட கூட்டாண்மை சமஷ்டிமுறை சமஷ்டி முறையாக மாற்றம் பெற்றுள்ளது. அங்கு 1848, 1874, 1999 ஆண்டுகளில் அரசியல் அமைப்பு சட்டங்களை முழுமையான சட்டத்திருத்த செயன்முறையின் மூலம் ஓரளவு மையப்படுத்தப்பட்ட செயல்முறையொன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ கூட்டாட்சி அரசியல் அமைப்பு:-
சுவிட்சர்லாந்து ஒரு கூட்டாட்சி முறையை உடையதாகவும், அங்கு 20 முழுக்கண்டங்களும் (மாநிலங்கள்) 06 அரை கண்டங்களும் உள்ளன. அரசியல் திட்டத்தின் மூலம் மத்திய மாநிலங்களுக்கு இடையே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

❖ எழுதப்பட்ட நெகிழா அரசியல் திட்டம்:-
சுவிட்சர்லாந்து யாப்பு எழுதப்பட்ட, நெகிழா யாப்பாகும். இவ் யாப்பு மூன்று பெரும் பிரிவுகளையும் 123 சரத்துக்களையும் உள்ளடக்கியதாகும். அரசியல் திட்டத்திருத்தங்களை மேற்கொள்ளும் போது இரு சபைகளினதும் சம்மதமுழ. மக்கள் தீர்ப்பில் மக்களின் அங்கீகாரமும் அவசியமாகும்.

❖ அதிகாரப்பங்கீடு:-
யாப்பில் மத்திய அரசுக்கும், மாநிலங்களுக்கும் இடையே அதிகாரங்கள் பங்கிடப்பட்டுள்ளன. வெளியுறவு, பாதுகாப்பு, நிதி போன்றன மத்தியரசுக்கும் கல்வி, சுகாதாரம், பெருந்தெருக்கள், கைத்தொழில் என்பன மாநில அரசுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

❖ மத்திய அரசில் இருமன்ற சட்டத்துறை:-
மத்திய அரசின் சட்டத்துறையா சமஷ்டி மன்றமானது தேசிய சபை, மாநிலங்கள் சபை என இரு சபைகளை உடையது. மாநிலங்கள் அவை சமஷ்டி அரசுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

❖ கூட்டாட்சி நீதிமன்றம்:-
சுவிட்சர்லாந்திலும் சமஷ்டி நாடுகளில்போல கூட்டாட்சி நீதிமன்றம் காணப்படுகின்றது. எனினும் இம்மன்றம் அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்தைபபோல அதிகாரமுடையதாக காப்படவில்லை.

சமஷ்டிப் பேரவை/கூட்டு நிறைவேற்றுத்துறை/கூட்டாட்சி நிறைவேற்று குழு

## Federal Council

சுவிட்சர்லாந்தின் சமஷ்டிப் பேரவை கூட்டு நிறைவேற்று குழு எனவும் அழைக்கப்படுகின்றது. நிர்வாகத்துறை அதிகாரங்களை இக்குழுவே மேற்கொள்கின்றது. இந் நிருவாக அமைப்பானது பிரித்தானியா, அல்லது அமெரிக்க மாதிரியை போன்றதாகவோ அல்லாமல் தனித்துவமானதாக விளங்குகின்றது. இக்கூட்டாட்சி நிறைவேற்றுக் குழுவானது சமஷ்டி மன்றின் (Federal Assembly) இன் இரு சபைகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட ஏழு உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும். இதன் பதவிக்காலம் நான்கு வருடங்களாகும். இவ் ஏழு உறுப்பினர்களில் ஒருவர் கூட்டாட்சி குழுவின் தலைவராகவும், துணைத் தலைவரும் ஒரு வருட பதவி காலத்துக்கு தெரிவுசெய்யப்படுவர். அடுத்த வருடம் மீண்டும் புதிய தலைவரும், துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுவர். கூட்டாட்சிக் குழ தலைவர் “குடியரசு தலைவர்” என அழைக்கப்படுவார். எனினும் அவருக்கு விஷேட அதிகாரங்கள் இல்லை. அவர் சமமானவர்களில் முதல்வர் என்ற வகையில் செயற்படுவார்.

சமஷ்டிப் பேரவையின் தலைவர் அதன் கூட்டங்களுக்கு தலைமைத்தாங்குவார். சாதாரண நிலைமைகளின்போது குறைந்தது வாரத்தில் ஒரு தடவையாவது கூட வேண்டும். பொதுவாக ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் பேண் நகரிலுள்ள சமஷ்டி மாளிகையில் கூடும். கூட்ட நடப்பெண் 4 ஆகும். உறுப்பினர் 7 பேரும் சமூகமளிப்பர்.

ஏனைய நாடுகளில் அமைச்சர்கள் என்று அழைக்கப்படுவது போன்று சுவிட்சர்லாந்தில் ஏழு இலாக்காகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இலாக்காவையும் இப்பேரவையின் ஒவ்வொரு உறுப்பினர்களின் மேற்பார்வையின் கீழ் செயற்படும். அவையாவன:-

1. வெளி விவகார இலாக்கா
2. உள்நாட்டு விவகார இலாக்கா
3. நீதி மற்றும் பொலிஸ் இலாக்கா
4. பாதுகாப்பு, சிவில் பாதுகாப்பு மற்றும் விளையாட்டு விவகார இலாக்கா.
5. நிதி இலாக்கா
6. பொருளாதார விவகார இலாக்கா
7. வர்த்தகம், போக்குவரத்து, சூழல் மற்றும் ஊடக இலாக்கா

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

சம்'டிப் பேரவையின்/ கூட்டாட்சி குழுவின்
அதிகாரங்களும் கடமைகளும்

(அ) சட்டத்துறை அதிகாரங்கள்:-
சட்ட மசோதாக்களை தயாரித்தல், அவற்றை நிறைவேற்றிக் கொள்ளுதல், அவற்றை நடைமுறைப்படுத்துதல், இவற்றுக்கு மேலதிகமாக நிதி விடயங்களை நிர்வகித்தல், நிதித் திட்டமிடல்களை மேற்கொள்ளுதல், வரவு செலவு திட்டத்தை தயாரித்தல், சமஷ்டிக் கணக்குகளை கொண்டு நடத்துதல்.
(ஆ) பொதுக் கொள்கைகளைத் தீர்மானித்தல்:-
அரசின் நோக்கங்களை திட்டமிடுவதும் இணைப்பதும் பேரவையாகும். இந்நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக சமஷ்டிப் பேரவை ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என யாப்பு குறிப்பிடுகின்றது.
(இ) நிறைவேற்று அதிகாரங்கள்:-
நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிறைவேற்றுதல் உயர் பதவிகளுக்கான ஆட்களை நியமித்தல், ஆயுதப்படை தலைவர்களை நியமித்தல், போர் மற்றும் சமாதானத்தை பிரகடனம் செய்தல், பாதுகாப்புக்கு பொறுப்பாக இருத்தல், நாட்டில் சிவில் சேவையை வழிநடத்துதல்.
(ஈ) வெளிநாட்டு உறவுகளை கொண்டு நடத்ததல்:-
வெளிநாட்டு விவகாரங்களை கொண்டுநடத்துதல், சுவிட்சர்லாந்து சார்பாக வெளிநாட்டு விடயங்களில் பங்கேற்கின்றது. அரசின் சார்பாக வெளிநாட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்
(உ) மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான தொடர்புகளைப் பேணுதல்:-
மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையிலான தொடர்புகளை பேணும் பூரண பொறுப்பு இதற்குள்ளது. எனவே மாநிலங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு மாநில யாப்பினை சமஷ்டி சட்டத்தின் மூலம் அங்கீகரிக்க வேண்டிய கட்டத்தில் அதற்கான அதிகாரம் பேரவைக்கே உண்டு. மேலும் மாநிலங்களுக்கிடையில் அல்லது இரண்டு மாநிலங்களுக்கிடையில் அல்லது ஒரு மாநிலத்துக்கும் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்துக்கும் இடையில் கைச்சாத்திடும் ஒப்பந்தங்களை எதிர்க்கும் அதிகாரமும் பேரவைக்கு உண்டு. அச்சந்தர்ப்பத்தில் இறுதி நடுத்தீர்ப்பாளர் சமஷ்டி பேரவையன்று சட்டமன்றமான சமஷ்டி மன்றமாகும் ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு பேரவைக்குறியது.

பிரித்தானிய அரசியல் திட்டம் ஒற்றையாட்சி பண்புகளில் இருந்து
விலகிச்செல்லும் விதம்.

பிரித்தானிய அரசியல் அமைப்பு முறை பல நூற்றாண்டுகளாக ஒற்றையாட்சி மாதிரியை கொண்டமைந்ததாக இருந்து வந்துள்ளது. பிரித்தானிய அரசியல் திட்டம் எழுதப்படாத அரசியல் அமைப்பு ஆகும். எனினும் சில எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் சில மரபுகளையும், மக்னா காட்டா ஒப்பந்தம், மனித உரிமை பட்டயம் என்பவற்றைறயும் கொண்டமைந்ததாக காணப்படுகின்றது. பிரித்தானிய அரசியல் அமைப்பை வரலாற்று ரீதியாக நோக்குகின்றபோது அதனை ஒற்றையாட்சிப் பண்புகளையுடைய அரசியல் திட்டம் என குறிப்பிடலாம்.

பிரித்தானிய அரசியல் முறைமையில் அண்மைக்கால நிகழ்வுகளை நோக்கும்போது அதிலும் குறிப்பாக 1998ஆம் ஆண்டுக்கு பின்பு இடம்பெற்ற மாற்றங்கள் பிரித்தானிய ஒற்றையாட்சி முறைமையிலிருந்து விலகிச் சென்று கொண்டிருப்பதை காட்டுகின்றது. 1998ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்து ஆகியவற்றுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டதன் மூலம் இந்நிலை உருவாகியது.

பிரித்தானிய அரசியல் முறைமை ஒற்றையாட்சி முறைமையிலிருந்து விலகிச் சென்று கொண்டிருப்பதற்கான பின்னணியை பின்வருமாறு எடுத்தக்காட்டலாம்.

- ஐரிஸ் பிரிவினை கோரிக்கைக்கான போராட்டம் வட அயர்லாந்தில் இடம்பெற்றது. ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் இராச்சியங்களில் பிராந்திய சுயாட்சிக்காக தேசிய இயக்கங்கள் கோரிக்கைகளை முன்வைத்தன. எனவே இவ் பிராந்தியங்களுக்கு அதிகாரத்தினை பரவலாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. 1998இல் அதிகார பரவலாக்கங்களை மேற்கொண்டது.
- பிரித்தானிய பாராளுமன்றம் 1998ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து சட்டம் 1998 ஆம் ஆண்டு வேல்ஸ் அரசாங்க சட்டம் 1998ஆம் ஆண்டு வட அயர்லாந்து சட்டம் என்பவற்றை இயற்றியது.
- பிராந்திய தேசியவாதத்தின் வளர்ச்சியே பிரித்தானியாவின் ஒற்றையாட்சி மாதிரி மாற்றமடைவதற்கு பிரதான காரணியாக அமைந்தது.
- 1970களில் அதிகார பரவலாக்கள் அவசியம் என்ற கருத்து எழுச்சிப் பெற்றது. அதனை தொடர்ந்து 1990 களில் பிரதான அரசியல் கட்சிகளும் இக்கருத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்தது. எனவே அதிகாரப் பரவலாக்கத்தினை ஏற்றுக்கொண்டது.

- பிரித்தானிய அரசியல் கட்சிகள் பிரித்தானிய ஒற்றையாட்சி மாதிரியில் மாற்றங்களை செய்து பிராந்திய சுயாதீனத் தன்மையுடன் கூடிய அதிகார பரவலாக்கத்தை மேற்கொள்வதற்கு உடன்பட்டன.
- பிரித்தானிய அரசியல் அமைப்பு ஒரு தூய ஒற்றையாட்சி பண்புகளில் இருந்து விலகி சென்றுள்ளது. எனினும் ஒரு சமஷ்டிக்குரிய பண்புகளை பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய அமைப்பு ஒரு கலப்பு அரசியல் அமைப்பு என குறிப்பிடலாம்.


உசாத்துணை:-

இலகுவழி அரசறிவியல் - கந்தையா சங்கரலிங்கம்

அரசறிவியல் ஓர் அறிமுகம் - பாகம் 3 - ALM பலீல்

ஒப்பீட்டு அரசியல் - அம்பலவானர் சிவராசா

ஒப்பியல் அரசாங்கம் - சி. ஆ. யோதிலிங்கம்

அரசியல் அமைப்புகள் ஓர் ஒப்பீடு - மோ. வள்ளுவன் கிளாரன்ஸ்

சுவிட்சர்லாந்து அரசாங்கமும் அரசியலும் - எம். எம். இ.ஃஜாஸ்


பயிற்சி வினாக்கள்:-

1. அமெரிக்க சமஷ்டி முறையின் பண்புகளை விளக்குக.
2. அமெரிக்க சமஷ்டி முறைமையில் மத்திய - மாநில அரசுகளுக்கு இடையிலான தொடர்பை விளக்குக.
3. இந்திய சமஷ்டி ஓர் அரைகுறை சமஷ்டியாகும். விளக்குக.
4. இந்திய சமஷ்டி முறைமையின் ஒற்றையாட்சி பண்புகளை எடுத்துக் காட்டுக.
5. சுவிட்சர்லாந்து சமஷ்டி முறைமையின் பண்புகளை குறிப்பிடுக.
6. சுவிட்சர்லாந்து கூட்டாட்சி நிறைவேற்றுக்குழுவின் அமைப்பு மற்றும் அதிகாரங்களை விளக்குக.
7. சமஷ்டிப் பேரவைக்கும் சமஷ்டி மன்ஸ் இடையிலான தொடர்பை விளக்குக.
8. “பிரித்தானிய அரசியல் அமைப்பு ஒற்றையாட்சி முறையில் இருந்து விலகி செல்கின்றது.” இதனை விளக்குக.
9. பிரான்சிய அரசியல் அமைப்பின் பண்புகளை விளக்குக.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

## பகுதி – **B**

1. அமெரிக்க காங்கிரசின் இரு சபைகளையும் பெயரிடுக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

2. அமெரிக்க பிரதான அரசியல் கட்சிகள் இரண்டினையும் தருக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

3. அமெரிக்க அரசியல் அமைப்பின் சமஷ்டி பண்புகள் இரண்டு தருக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

4. இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் பெயரிடுக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

5. இந்திய சமஷ்டியின் ஒற்றையாட்சி பண்புகள் இரண்டு தருக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

6. இந்தியாவின் மாநிலங்கள் இரண்டினை பெயரிடுக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

7. சுவிஸ் சமஷ்டி சட்ட மன்றின் இரு சபைகளையும் பெயரிடுக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

8. சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையின் இரு பண்புகளை தருக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

9. பிரித்தானிய பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் பெயரிடுக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

10. பிரான்சிய பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் பெயரிடுக.

(i)……………………………………………………………………………………………

(ii)……………………………………………………………………………………………

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# அலகு - 11

## பொதுக்கொள்கை - **Public Policy**

பொதுக்கொள்கை என்பதனை அரச கொள்கை பொது கொள்கையாக்கம் எனவும் அழைப்பர். அரச கொள்கை தொடர்பாக சரியானதும் பொதுவானதுமான வரைவிலக்கணம் இல்லை. இது தொடர்பாக பல்வேறு அரசியல் அறிஞர்களும் பல்வேறு விதமாக வரைவிலக்கணங்களை முன்வைக்கின்றர். ஒரு நாட்டின் ஆட்சியை கொண்டு நடத்துவதில் இரண்டு கொள்கைகள் முக்கிய பங்குவகிக்கின்றன. பொதுக்கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை என்பனவே அவ்விரண்டுமாகும். பொதுக்கொள்கை என்பது அரசாங்க கொள்கைகளை மாத்திரம் உள்ளடக்கியதொன்றாகும் என குறிப்பிட்டாலும் பொதுக் கொள்கை தொடர்பில் சரியானதும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான வரைவிலக்கணம் ஒன்றை முன்வைப்பது கடினமானதாகும்.

அரசாங்கம் என்ன செய்கின்றது அல்லது என்ன செய்வதற்கு எதிர்பார்க்கின்றது. அல்லது எதனைச் செய்ய தீர்மானித்துள்ளது என்பவற்றைக் குறிக்கும் அரசாங்கத்தின் தீர்மானங்களே பொது கொள்கை என அழைக்கப்படுகின்றது. அதாவது அரசியல் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் அரசாங்கமானது நடைமுறையிலுள்ள அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் கொள்கைகளே பொதுக்கொள்கையாகும். இதனை சுருக்கமாக கூறின் "ஓர் அரசியல் சமூகம் அவ்வக்காலப்பகுதியில் எதிர்நோக்கும் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அராங்கம் மேற்கொள்ளும் கொள்கைகளே பொதுக்கொள்கையாகும்."

இதன்படி பொது கொள்கை என்பது ஒரு நாட்டின் அரசாங்கத்துடைய நிர்வாக செயற்பாடுகள், நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த உதவுபவையாகும். மேலும் ஒவ்வொரு இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வடிவமே பொதுக்கொள்கை எனலாம். பொதுவாக கொள்கை என்பது குறிப்பிட்ட ஓர் இலக்கை அடைந்துகொள்வதற்காக ஆட்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும். இதன்படி பொதுக்கொள்கை என்பது தனிப்பட்டவர்கள் மாத்திரமல்லாது பல நிறுவனங்கள், அமைப்புக்கள், சமூக கலாசார பிரச்சினைகள், அமுக்கக் குழுக்கள் ஆகியோரின் செல்வாக்கினால் உருவாக்கப்பட்டு அரசாங்கத்தினால் தனது ஆட்சிப் பிரதேசத்துக்குள் வாழும் மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் கொள்கையாகும்.

அரசாங்கம் தமது ஆட்சியினை கொண்டு செல்வதற்காக அரசியல் கொள்கை, பொருளாதார கொள்கை, சமூகக் கொள்கை ஆகிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றன. அரசியல் கொள்கை என்பது ஓர் அரசாங்கம் ஏனைய சர்வதேச நாடுகள், நிறுவனங்களுடன் பேணுகின்ற தொடர்புகளைக் குறிக்கின்றது.

பொருளாதாரக் கொள்கை என்பது ஓர் நாட்டில் எவ்வாறான பொருளாதார கொள்கை காணப்படுதல் வேண்டும் என்பதனைக் குறிக்கின்றது. சமூகக்கொள்கை என்பது பல்லின சமூகம் வாழ்கின்ற மக்கள் மத்தியில் நல்லிணக்கம், சமூக அபிவிருத்தி என்பவற்றை உருவாக்கும் கொள்கைகளை கொண்டதாகும். பொதுக்கொள்கையானது மேற்குறிப்பிட்ட மூன்று கொள்கைகளையும் உள்ளடக்கிய முழு வடிவமாகும்.

### பொதுக்கொள்கையின் இயல்பும் முக்கியத்துவமும்

அரசாங்கத்தின் பிரதான பணி பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறைக்கு எல்லையில்லை. அது தொடர்ச்சியாக நிகழும் செயன்முறையாகும். காரணம் அரசாங்கம் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் ஒரு எல்லையற்றிருப்பதாகும். நிகழ்வுகளும் முடிவற்றதாகக் காணப்படுவதாகும்.

அதனால் அரசாங்கம் தீர்மானங்களை எடுக்கும் போது தெரிவுகளைத் தெரிவு செய்ய வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டும். கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான பொறிமுறையினைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்தும் கொள்கையே பொதுக் கொள்கை என்றழைக்கப்படுகின்றது. பொதுக் கொள்கையின் எண்ணிக்கையை அளவிட்டுக் கூறமுடியாது. மறுபுறம் பொதுக்கொள்கையின் பிறிதொரு பண்பு அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டிருத்தலாகும்.

அரசாங்கம் இக்கொள்கைகளை எவ்வாறு வகுக்கின்றது? அதில் பங்கேற்கும் ஆட்களும் நிறுவனங்களும் யாவை? மக்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் எவ்வாறு துலங்க வேண்டும். பொதுக்கொள்கை உருவாக்கம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றைக் கற்பதனால் மட்டுமே இவ் வினாக்களுக்கு விடை காண முடியும்.

எந்தவொரு பொதுக்கொள்கையும் விஷேட நோக்கங்களை அடைவதற்கும், விஷேட பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்குமே திட்டமிடப்படுகின்றது.

பொதுக் கொள்கைகள் இறுதி நோக்கங்கள் பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும். அல்லது இருக்கும் நிலையினை மேலும் மேம்படுத்துவதாகும்.

இப்பொருளில் பார்ப்பின் பொதுக்கொள்கைகளின் ஓர் அரசியல் முறையின் இறுதி வெளியீடாகும். அதன்மூலம் மக்களிடமிருந்து எழும் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் எவ்வாறு துலங்குகின்றது? அது தொடர்பாக அரசாங்கம் எவ்வாறு செயற்படுகின்றது என்பவையே வெளிப்படுத்தப்படுகின்றது.

வேறு வகையில் கூறின் பொதுக் கொள்கைகளின் மூலம் அன்றாடச் செயற்பாடுகளில் அரசாங்கம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை? அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எவ்வாறு செயற்படுகின்றது என்பனவே வெளிப்படுத்துகின்றது.

இதன்படி பொதுக் கொள்கை தொடர்பாக இரு பண்புகளை இனங்காணலாம்.

1. தனிமனிதனின் சமூக இருப்பு தொடர்பாக பொதுக் கொள்கைகளின் முக்கியத்துவம்
   தனிமனிதனின் சமூக இருப்பின் சகல துறைகளிலும் பொதுக்கொள்கையானது அதிக பாதிப்புச் செலுத்துகிறது. உதாரணமாக ஒரு பெருந்தெருவில் பயணிக்கும் ஒருவன் பாதையில் எப்பக்கமாகப் பயணிக்க வேண்டும். அவ்வாறு பயணிக்கும் போது ஓர் அடையாள அட்டையை தன்வசம் வைத்திருக்க வேண்டுமா என்பது பற்றி பொதுக்கொள்கையின் மூலமே தீர்மானம் எடுக்கப்படுகின்றது. அதேபோன்று கல்வியையும் சுகாதார வசதியையும் இலவசமாக வழங்குவதா? அல்லது கட்டணம் அறவிடப்பட வேண்டுமா? எவ்வளவு பணம் வரியாகச் செலுத்தப்பட வேண்டும்? மனித கொலைக்குக் குற்றவாளியாக ஆகியவனுக்குத் தூக்கு தண்டனை வழங்கப்படுமா இல்லையா? என்பன போன்றவை வாழ்க்கையோடு தொடர்பாக பௌதீக விடயங்கள் அரசு நடைமுறைப்படுத்தும் பொதுக் கொள்கையிலேயே தங்கியுள்ளன.

2. பொதுக்கொள்கைகள் மோதல் தன்மை வாய்ந்தவையாக இருத்தல்
   பொதுக்கொள்கை தொடர்பாக மேற்குறிப்பிட்ட முக்கியத்துவத்தின் காரணமாக அவை அரசியல் அதிகார போராட்டத்தின் கவனத்துக்குட்படும் பிரதான பகுதியாக மாறியுள்ளது.

   ஓர் அரசாங்கம் எத்தகைய பொதுக்கொள்கையை பின்பற்ற வேண்டும் என்று தீர்மானிப்பது எளிதன்று. இறுதிக்கொள்கையானது தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகச் செயற்படும் போட்டித் தன்மையும், மோதல் தன்மையும் வாய்ந்த சக்திகளின் அடிப்படையிலேயே நிர்ணயமாகும்.

   நிறைவேற்று, சட்டவாக்க, நீதித்துறைகள், பணியக முறை, ஏனைய அரசுகள், சர்வதேச நிறுவனங்கள், துணை மற்றும் மத்திய அரசாங்கங்கள், அரசியல் கட்சிகள், அமுக்க குழுக்கள், பொதுஜன அபிப்பிராயம், ஊடகம் போன்றவையே அச்சக்திகளாகும்.

   பொதுக்கொள்கை என்பது இப்போட்டித் தன்மை வாய்நத அரசியல் சக்திகளின் இறுதி வெளியீடாகும். பொதுக்கொள்கை உருவாக்கம் மற்றும் அரசியல் தீர்மானம் எடுப்பு என்பவற்றின் மூலம் அரசியல் முறைமையின் உண்மையான செயற்பாடு மற்றும் அரசியல் முறைமையில் யார் பலம் வாய்ந்தவர்கள் என்பன தெளிவான முறையில் காட்டப்படும்.

   அரசியல் என்பது யார், எதனை, எவ்வாறு, எப்போது பெற்றுக் கொள்ளலாம் என்பதாயின் பொதுக் கொள்கையைக் கற்பதன் மூலம் அவ்வாறே யார்? எதனை? எவ்வாறு? எப்போது பெற்றுக் கொள்வர் என்பதனை அறிய முடிகின்றது.

## பொதுக்கொள்கை வாழ்க்கை வட்டம் - **Policy Life Cycle**


பொதுக் கொள்கையின் ஆரம்பம் முதல் இறுதிவரை நடைபெறுகின்ற சகல விதமான செயன்முறைகளையும் உள்ளடக்கியதே பொதுக் கொள்கை வாழ்க்கை வட்டம் அல்லது சக்கரம் என அழைக்கப்படுகின்றது. பொதுக்கொள்கை வட்டம் தொடர்பாக அரசறிவியல் அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றது. சில அரசியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி பொதுக்கொள்கை வாழ்க்கை வட்டம் பின்வரும் நான்கு கட்டங்களைக் கொண்டுள்ளது.

1. கொள்கை ஆரம்பிப்பு
2. கொள்கை உருவாக்கம்
3. கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
4. கொள்கைகளை மதிப்பீடு செய்தல்

மேலும் சில அறிஞர்கள் குறிப்பிடுவதன்படி பொதுக்கொள்கை செயன்முறையானது (படிமுறை) பின்வரும் ஆறு கட்டங்களையுடையதாகும்.

1. நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்
2. கொள்கை வகுப்பு / தீர்மானம் எடுத்தல்
3. கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளை தெரிவு செய்தல்.
4. கொள்கை மதிப்பீடு செய்தல்
5. கொள்கை மீளாய்வு செய்தல்
6. கொள்கை நிறைவு செய்தல்

**பொதுக்கொள்கை வட்டம் - Policy Life Cycle**




(1) நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்
பொதுக் கொள்கை உருவாக்கத்தின முதலாவது படிமுறை கொள்கை நிகழ்ச்சி நிரல் தயாரித்தலாகும். பிரச்சினைகளை இணங்கண்டு அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்ப முன்னுரிமை பட்டியலைத் தயாரித்தல், மாற்றுக் கொள்கைகளை இணங்காணல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி உருவாக்கப்படும் ஆரம்பத் திட்டமாகும். இதனையே நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் என குறிப்பிடுவர்.

(2) கொள்கை வகுப்பு ∴ தீர்மானம் எடுத்தல்
கடந்த கால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் எதிர்காலததில் ஏற்படப் போகின்ற பாதகமான நிலைமைகளைத் தடுத்துக் கொள்ளும் நோக்கில் அது தொடர்பான சட்டங்களை உருவாக்கும் செயன்முறையாகும். அதாவது நிகழ்ச்சி நிரலைத் தயாரித்த பின்னர் நடைமுறைப்படுத்த வேண்டிய கொள்கைகளை தீர்மானித்தலாகும்.

(3) கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
பொதுக் கொள்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட மசோதா சட்டமாக மாறியதன் பின்னர் அக்கொள்கைகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்று நடைமுறைப்படுத்தும் செயன்முறையாகும். இப் பொறுப்பு பொதுத்துறை நிருவாகத்திடம் ஒப்படைக்கப்படும்.

(4) கொள்கை மதிப்பீடு
மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுக் கொள்கை செயற்பாடுகளினால் ஏற்பட்ட சாதக மற்றும் பாதக அமசங்களை மதிப்பீடு செய்வதனைக் குறிக்கும் செயன்முறையாகும். இதன்மூலம் அந்த நோக்கத்தையடிப்படையாக கொண்டு விளைவுகளை மதிப்பிடுவதாகும்.

(5) கொள்கை மீளாய்வு
கொள்கை மதிப்பீடு மூலமாக கற்றுக்கொண்ட விடயங்களை அதன் சவால்கள், தவறுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்து அதில் மாற்றத்தினை ஏற்படுத்தி அக்கொள்கை செயற்பாட்டினை வெற்றிகரமான முறையில் கொண்டு செல்லும் செயன்முறையாகும்.

(6) கொள்கை நிறைவு செய்தல்
பொதுப் பிரச்சினையை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கையை மக்கள் பயன்பாட்டிற்காக வழங்கியதன் பின்னர் அது தொடர்பான நடவடிக்கைகளை நிறைவுசெய்யும் செயன்முறையாகும்.

## பொதுக்கொள்கை உருவாக்கத்தில் அரசியல் கட்சிகளின் வகி பங்கு

அறிமுகம்

பொதுக்கொள்கை உருவாக்க செயன்முறை என்பது மக்களுடைய தேவைகளுக்கு, கோரிக்கைகளுக்கு மற்றும் நன்மைகளுக்கு பதிலளிக்கின்ற ஒரு இயக்கத்தன்மை கொண்ட செயன்முறையாகும். ஜனநாயக நாடுகளில் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான பிரதான இணைப்புப் பாலமாக் காணப்படுவது அரசியற் கட்சிகளாகும். அந்த வகையில் அரசியற் கட்சிகள் கொள்கை உருவாக்க செயன்முறையிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இச்செயன்முறையை அவை இலகபடுத்துகின்றன. பொதுக்கொள்கைகள் இறுதியில் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டு பணியகவமைபினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டாலுங்கூட கொள்கை வாழ்க்கை வட்டம் என்பது பிரஜைகள் மற்றும் அவர்களின் நலன்கள், தேவைகள் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் சமூகத்தில் ஆரம்பிக்கின்றது.

1. பொதுக் கொள்கை உருவாக்க கட்டங்களில் கட்சிக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களின் ஊடக அரசியல் கட்சிகள் முக்கிய பங்கினை ஆற்றுகின்றன.

2. கட்சிகளின் நிகழ்ச்சி நிரல் ஊடாக அரசியல் கட்சிகள் பொதுக் கொள்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான கந்துரையாடலையும் கருத்தாடலையும் உருவாக்குகின்றன. இது கொள்கைப் பிரச்சினைகளுக்கான பொது மக்களின் ஆதரவினைத் திரட்டுவதாகவும் அமைகின்றது. அந்த வகையில் கட்சிகளின் நிகழ்ச்சி நிரல் மற்றும் கொள்கைகள் பொதுக்கொள்கை உருவாக்கத்திலும் கொள்கை நிகழ்ச்சி நிரல் தயாரிப்பிலும் செல்வாக்கு செலுத்துகின்றன.

3. ஜனநாயக சமூகங்களில் அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சி நிரல்லில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களினை சமூகத்தில் காணப்படும் கொள்கைப் பிரச்சினைகளை முறைப்படுத்தி சரியான வடிவத்தினை அரசியற் கட்சிகள் வழங்குகின்றன.

4. அரசியற் கட்சிகள் கொள்கை கலந்துரையாடல்களில் மக்களின் நலன்கள் மற்றும் தேவைகளை ஒன்றிணைக்கின்றன.

5. அரசியல் கட்சிகள் நடைமுறையில் இருக்கின்ற கொள்கைகள் மற்றும் முன்மொழியப்படுகின்ற கொள்கைகளில் காணப்படுகின்ற சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக பொதுமக்களுக் அறிவூட்டுகின்றன. இது பொதுக் கொள்கைகள் பொது மக்களின் கருத்துகளுக்கும் விமர்சனத்திற்கும் உள்ளாவதற்கு உதவுகின்றது.

6. பொதுக்கொள்கை தொடர்பான கருத்தாடலை மக்கள் மத்தியில் கொண்டு சென்று அவர்களின் அபிப்பிராயத்தை ஒன்று திரட்டுவதன் மூலமும் பொதுக்கொள்கை உருவாக்கச் செயன்முறையில் பிரஜைகள் பங்களிப்பதற்க அரசியற் கட்சிகள் வசதியளிக்கின்றன. அவ்வாறு செய்வதன் மூலம் பொது மக்களுக்கும் பொதுக்கொள்கை ஆக்குபவர்களுக்கும் இடையில் இணைப்பு பாலமாக இருந்து கொள்கை மறுசீரமைப்புக்களை மற்றும் மாற்றங்களை செய்வதற்க உதவுகின்றன.

முடிவுரை

ஜனநாயக சமூகங்களில் மக்களுடைய கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை ஒன்றுதிரட்டி அவற்றை அரசியல் மற்றும் கொள்கைப் பிரச்சினைகளாக மாற்றுவதில் அரசியற் கட்சிகள் பிரதான நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. மக்கள் தம்மை கொள்கைச் சென்முறைகளுடன் இணைத்துக் கொள்வதற்கான பிரதான நிறுவனப் பொறிமுறையாக அரசியற் கட்சிகள் காணப்படுகின்றன. அதேவேளை அரசியற் கட்சிகள் பொதுக்கொள்கை தொடர்பாக பொதுமக்களின் ஆதரவு, எதிர்பார்ப்பு, விமர்சனம் என்பவற்றை கட்டியெழுப்புகின்ற பணிகளையும் ஆற்றுகின்றன. அதிகாரத்தில் இருக்கின்ற அரசியற் கட்சிகள் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்ற மற்றும் அவற்றை மறுசீரமைக்கின்ற முக்கிய பணிகளை ஆற்றுகின்றன. அந்தவகையில் அரசியற் கட்சிகள் பொதுக்கொள்கை உருவாக்க செயன்முறையில் எல்லா கட்டங்களையும் உள்வாங்கியிருப்பதுடன் அது ஜனநாயக சமூகமொன்றில் மிகமுக்கியமான பணியாகவும் காணப்படுகின்றது.

குறிப்பு:-

இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள குறிப்புக்கள் வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள கவனத்தில் கொள்ளவும். இங்கு தரம் 13 பாடதிட்டத்திலுள்ள அலகுகளில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பாட அலகு தொடர்பாக மேலதிகமாக மேலும் தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்த கால அரசியல், விஞ்ஞான வினாவிடை புத்தகம்
- புள்ளியிடும் திட்டம் - இலங்கை பரீட்சைத் திணைக்களம், G. C. E. (A/L) அரசறிவியல்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, தரம் 3 – தேசிய கல்வி நிறுவகம்.

மாதிரி வினாக்கள்

1. பொதுக்கொளகையின் இயல்பும் முக்கியத்துவத்தினையும் விளக்குக.
2. பொதுக்கொள்கை வாழ்க்கை வட்டத்தை விளக்குக.
3. பொதுக்கொள்கை உருவாககத்தில் அரசியல் கட்சிகளின் வகிபங்கு.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# அலகு - 12

## இரண்டாம் குடியரசு யாப்பு – 1978

குடியரசின் ஜனாதிபதி:-

இரண்டாம் குடியரசு யாப்பு இலங்கையில் ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகம் செய்தது. இதன்படி யாப்பின் ஏஐஐஆம் அத்தியாயத்தின் 30(1) சரத்து "இலங்கை குடியரசுக்கு ஜனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவராகவும் ஆட்சித்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவராகவும், ஆயுதந்தாங்கிய படைகளின் தலைவராகவும் இருத்தல் வேண்டும்" என்கிறது. 30(11) "குடியரசின் ஜனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர் ஐந்தாண்டுகள் கொண்டவொரு தவணைக்குப் பதவி வகித்தலும் வேண்டும்" என்கிறது.

ஜனாதிபதி தெரிவு முறை அல்லது ஜனாதிபதி தேர்தல்

ஜனாதிபதி வேட்பாளருக்கு இருக்க வேண்டிய தகைமை தொடர்பாக யாப்பின் 31(1) சரத்து பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியில் பிரதிநிதியாக போட்டியிடுதல், அல்லது சுயேட்சை வேட்பாளராயின் பாராளுமன்ற உறுப்பினராக இருத்தல், இருந்திருத்தல்.
(ஆ) ஜனாதிபதி பதவிக்கு மக்களால் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லாதிருத்தல்.
(இ) 92(அ) 35 வயதை பூர்த்தியடைந்த இலங்கை பிரஜையாக இருத்தல்.

ஜனாதிபதி தேர்தலின் போது இலங்கை முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாக கொள்ளப்படும். தேர்தலில் இரு வேட்பாளர்கள் மாத்திரம் போட்டியிட்டால் சாதாரண பெரும்பான்மை முறைப்படி இருவரில் எவர் பெரும்பான்மையை பெறுகின்றாரோ அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார்.

ஜனாதிபதி தேர்தலில் இருவருக்கு மேற்பட்டோர் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் வாக்காளர் எவ்வாறு வாக்களிப்பது என யாப்பின் 94(1) சரத்து பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

(அ) அத்தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் இருக்கின்ற விடத்து இரண்டாவது ஆளாக யாரை விரும்புகிறார் என்பதையும் தெரிவிக்கலாம்.
(ஆ) அத்துடன் அத்தேர்தலில் மூன்றுக்க மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றபோது, இரண்டாவது ஆளாகவும், மூன்றாவது ஆளாகவும் யாரை விரும்புகின்றார் என்பதையும் தெரிவிக்கலாம்.

இதன்படி ஜனாதிபதி தேர்தலில் இருவருக்கு மேற்பட்டோர் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் வாக்காளருக்கு ஒரு வாக்கும் இரண்டு விருப்பத் தெரிவுகளும் உள்ளன. வாக்காளர் தனது வாக்கையளிப்பதோடு அவர் விரும்பினால் ஏனைய வேட்பாளர்களுக்கு 2ம், 3ம் விருப்பத் தெரிவுகளையும் வழங்கலாம். விருப்பு வாக்குகளை கட்டாயம் வழங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அது வாக்காளரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். வழங்கவும் முடியும், வழங்காது இருக்கவும் முடியும்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற வேண்டிய வேட்பாளர் 94(1) சரத்தின்படி அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கும் (50%) மேற்பட்ட வாக்குகளைப் பெற வேண்டும். அதனைப் பெற்றவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார்.

கடந்த 2019 நவம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோதாபய ராஜபக்ஷ 52.25% வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதனை உதாரணமாக குறிப்பிடலாம்.

கடந்த கால ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்

| வருடம் | வேட்பாளர் பெயர் | சின்னம் | வாக்கு வீதம் |
|---|---|---|---|
| 1982 | J. R. ஜயவர்தன | யானை | 52.91% |
| 1988 | R. பிரேமதாச | யானை | 50.43% |
| 1994 | சந்திரிக்கா | கதிரை | 62.28% |
| 1999 | சந்திரிக்கா | கதிரை | 51.17% |
| 2005 | மஹிந்த ராஜபக்ஷ | வெற்றிலை | 50.29% |
| 2010 | மஹிந்த ராஜபக்ஷ | வெற்றிலை | 57.88% |
| 2015 | மைத்திரிபால சிரிசேன | அன்னம் | 51.28% |
| 2019 | கோத்தாபய ராஜபக்ஷ | மொட்டு | 52.25% |

ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் செல்லுப்படியான வாக்குகளில் அரைவாசிக்கும் (50%) மேற்பட்ட வாக்குகளைப் பெறாவிட்டால் இரண்டாவது விருப்பு வாக்குகளை கணிப்பிட வேண்டுமென யாப்பின் 94(3) சரத்து குறிப்பிடுகின்றது.

அதன்படி தேர்தலில் ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளரும் அதற்கடுத்தப்படியாக கூடுதலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளரையும் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்கள் போட்டியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறு நீக்கப்பட்ட வேட்பாளர்களின் வாக்குச்சீட்டில் எஞ்சியுள்ள இரண்டு வேட்பாளர்களில் (கூடுதலான வாக்குகளைப் பெற்ற முதல் இருவரும்) ஒருவருக்கு இரண்டாவது விருப்பத்தெரிவை வழங்கியிருந்தால் அவை அவர்கள் பெற்ற வாக்குகளுடன் சேர்க்கப்படும். அவ்விரு வேட்பாளர்களில் எவர் அரைவாசிக்கும் (50%) மேல் வாக்குகளைப் பெறுகின்றாரோ அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார்.

மூன்றாவது விருப்பு வாக்கு கணிப்பீடு

இரண்டாவது விருப்பு வாக்கு கணிப்பீட்டின் போதும் அவ்விருவரில் எவரும் அரைவாசிக்கு (50%) ற்கு மேல் வாக்குகளைப் பெறாவிட்டால் அவ்விருவருக்கும் வழங்கப்பட்ட மூன்றாவது விருப்பு வாக்குகள் கணிப்பிடப்பட்டு அவ்விரு வேட்பாளர்களில் மிகக் கூடுதலான வாக்குகளைப் பெரும் வேட்பாளர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். இதன்போது மொ. செ. வாக்குகளில் 50% அவசியமில்லை.

94(4) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் சமமான வாக்குகளைப் பெறும் சந்தர்ப்பத்தில் திருவுளச் சீட்டு (லொத்தர்) மூலம் அவ்விரு வேட்பாளர்களில் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுவார்.

32(1) ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுபவர் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் முன்னிலையில் அல்லது அந்நீதிமன்றத்தின் வேறு எவரேனும் நீதிபதியின் முன்னிலையில் சத்தியரப்பிரமாணம் செய்து ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொள்வார்.

ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யும் முறை அல்லது பழிமாட்டறைதல்

இரண்டாம் குடியரசு யாப்பின் 38(2) சரத்து ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதிக்கு எதிரான ஒரு குற்றப்பிரேரணையை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் அவரை பதவிநீக்கம் செய்வது தொடர்பாக விபரிக்கின்றது. அதன்படி பின்வரும் காரணத்திற்காக அல்லது காரணங்களுக்காக ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கலாம்.

38(2) (அ) உடல் - உள பலவீனத்தின் காரணமாக ஜனாதிபதி தமது பணிகளை நிறைவேற்ற முடியாதவராக இருத்தல் அல்லது,

(i) அரசியல் திட்டத்தை வேண்டுமென்றே மீறிய குற்றம்
(ii) தேச துரோகம் புரிந்திருத்தல்
(iii) இலஞ்ச ஊழல்
(iv) அதிகார துஸ்பிரயோகம்
(v) ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் குற்றம்

மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஏதாவது ஒன்றை அல்லது பலதை காரணம் காட்டி பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் 2/3 பங்கினர் (சமூகமளிக்காதோர் உட்பட) குற்றப் பிரேரணையில் கையொப்பமிட்டு சபாநாயகரிடம் சமர்ப்பித்தால் அப்பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அரைவாசிக்கு மேற்பட்டோர் மாத்திரம் கையொப்பம் இட்டிருந்தால் அப்பிரேரணையை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பதனை சபாநாயகர் தீர்மானிக்கலாம். இத்தகையை சந்தர்ப்பத்தில் குற்றப் பிரேரணையை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் சபாநாயகரின் தற்துணிவு அதிகாரத்தை (விருப்பத்தைப் பொறுத்ததாகும்)

- ❖ ஜனாதிபதிக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பிரேரனையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டால் அதனை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்து அதற்கென ஒதுக்கப்படும் ஒரு தினத்தில் பாராளுமன்ற விவாதத்திற்கு விடப்படும். அத்தீர்மானம் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும்.
- ❖ நிறைவேற்றப்பட்ட குற்றப் பிரேரனையில் இடம்பெறும் குற்றச்சாட்டுக்கள் சட்ட ரீதியாக நிரூபிக்கப்பட்டவை என பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சபாநாயகர் அதனை 38(2) (இ) உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பார். உயர்நீதிமன்றம் தனது அறிக்கையை இரண்டு மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்ற முறையான விசாரனையின் பின் ஜனாதிபதி குற்றவாளியல்ல என தீர்ப்பளித்தால் அக்குற்றப்பிரேரனை தள்ளுப்படி செய்யப்படும்.
- ❖ சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின்படி ஜனாதிபதி குற்றவாளியாக காணப்படுகின்றார் என தீர்ப்பளித்தால், பாராளுமன்றம் பாராளுமன்ற உறுப்பினர்களில் (சமூகமளிக்காதோர் உட்பட) 2/3 பகுதிக்கு குறையாதோர் வாக்களித்து அதனை நிறைவேற்றினால் ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றலாம்.

விமர்சனம்

இரண்டாம் குடியரசு யாப்பில் ஜனாதிபதியை பதவி அகற்றுவதற்கான யாப்பு விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வது இலகுவான ஒரு விடயமல்ல என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் கட்சி பெரும்பான்மையை வகிக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தில் ஆதரவு காணப்படும். மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை மற்றும் சலுகைகளை வழங்குவதன் மூலமாகவும் ஜனாதிபதி தனது செல்வாக்கை தக்கவைத்துக் கொள்ளலாம். அதுமட்டுமல்லாது, ஜனாதிபதியை பதவி அகற்றும் செயல்முறையானது நீண்ட படிமுறைகளை தாண்டிச் செய்ய வேண்டியிருப்பது மற்றுமொரு சவாலாக குறிப்பிடலாம். பிரேரணையை சமர்பிக்கின்ற போது பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை, தீர்மானம் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றப்படுதல், நீதிமன்ற விசாரணை, அதன் தீர்ப்பு, மீண்டும் பாராளுமன்றத்தில் 2/3 ஆதரவு என்ற வகையில் பல கட்டங்களை கடக்கவேண்டியுள்ளது.

1991இல் ஜனாதிபதி R. பிரேமதாசவுக்கு எதிராக அவர் அதிகார துஷ்பிரயோகம் மேற்கொண்டார் என்ற குற்றப்பிரேரணை பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 116 பேர் கையொப்பம் இட்டு சபாநாயகரிடம் சமர்பித்த போதும் சபாநாயகர் அதனை ஏற்றுக்கொள்ள தகுதியற்றதென தள்ளுப்படி செய்தார். இவ்விடயம் அக்காலகட்டத்தில் பலத்த விமர்சனங்களுக்கு ஆளாகியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## குடியரசின் ஜனாதிபதி

இரண்டாம் குடியரசு யாப்பு ஜனாதிபதி ஆட்சிமுறையை உடையதாகும். நிறைவேற்றுத்துறைக்குப் பொறுப்பான ஜனாதிபதி ஐந்தாண்டு பதவிக் காலததிற்காக மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுகின்றார். யாப்பின் 30(1) "இலங்கைக் குடியரசுக்கு ஜனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவராகவும் ஆட்சித்துறையினதும், அரசாங்கத்தினதும் தலைவராகவும், ஆயுதந்தாங்கிய படைகளின் தலைவரதகவும் இருத்தல் வேண்டும்" என்கிறது.

இந்த வகையில் 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் நிறைவேற்றுத் துறையின் தலைவரான ஜனாதிபதியின் சட்ட, நிருவாக, நீதித்துறை அதிகாரங்களை தனித்தனியே ஆராய்வதன் மூலம் ஜனாதிபதியின் நிலைய அறிந்துகொள்ள முடியும்.

### ஜனாதிபதியின் நிறைவேற்றுத்துறை அதிகாரங்கள் அல்லது ஜனாதிபதியும் நிறைவேற்றுத்துறையும்

யாப்பின் 30(1) சரத்து ஜனாதிபதி அரசினதும் ஆட்சித்துறையினதும், அரசாங்கத்தினதும் தலைவருமாவார் என குறிப்பிடுகின்றது. மேலும் யாப்பின் 33ஆம் சரத்து ஜனாதிபதியின் தத்துவங்களும் பணிகளும் தொடர்பாக விபரிக்கின்றது. இதன்படி ஜனாதிபதி நிறைவேற்றுத்துறையின் தலைவர் என்ற வகையில் பின்வரும் பணிகளையும் கடமைகளையும் மேற்கொள்கின்றார்.

(அ) யாப்பின் 33ஆம் சரத்து அரசியல் அமைப்பின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஜனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் மேலதிகமாக ஜனாதிபதி பின்வரும் பணிகளை மேற்கொள்கின்றார்.

(ஆ) யாப்பின் 33(இ) தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கயின் பேரில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தகுந்த நிலைமைகள் உருவாகுவதனை உறுதிப்படுத்துதல்.

(இ) 33(ஈ) அரச தூதுசர்கள், உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரசப் பிரதிநிதிகள், ஏனைய இராஜதந்திர முகவர்கள் என்போரை ஏற்று அங்கீகரிப்பதற்கும், அவர்களை நியமித்துப் பொறுப்பளிப்பதற்கும் அதிகாரம் பெற்றுள்ளார்.

(ஈ) 33(உ) உயர் தராதரங்களையுடைய நேர்மையை பேணி வந்துள்ள சட்டத்தரணிகளை ஜனாதிபதி வழக்கறிஞர்களாக நியமித்தல்.

(உ) 33(ஊ) குடியரசின் பொது இலட்சினையைக் காப்பில் வைத்திருப்பதுடன், அதனை பயன்படுத்தவும், குடியரசின் காணிகள் மற்றும் அசையும் அசையா ஆதனங்களை மாணியக் கொடைகள் மற்றும் கையளிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளார்.

(ஊ) 33(எ) போர் மற்றும் சமாதானம் என்பவற்றைப் பிரகடனம் செய்வதற்கும் அதிகாரமுடையவர்.

(எ) யாப்பின் 41 அ(1) நிர்வாகத்துறையில் பல்வேறு உயர்பதவி நியமனங்களை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளார். இதன்படி யாப்பின் 41 அ(1) சரத்துக்கமைய உறுப்பினர்களுக்கான அட்டவணை i, ii இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான ஆட்களை பாராளுமன்ற பேரவையின் அவதானிப்புக்கமைய நியமித்தல்.

(ஏ) யாப்பின் 43(2) மற்றும் 44(1) அ, ஆ ஜனாதிபதி அமைச்சரவையின் ஓர் உறுப்பினராக இருப்பதோடு அதன் தலைவராகவும் விளங்குகின்றார். அமைச்சுக்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல் அமைச்சர்களை நியமித்தல், மாற்றுதல், நீக்குதல்.

(ஒ) யாப்பின் 61 உ(அ) தரைப்படை, கடற்படை மற்றும் வான்படை ஆகிய முப்படைகளின் தலைவர்களையும், பொலிஸ்மா அதிபரையும் நியமித்தல்.

## ஜனாதிபதியின் சட்டத்துறை சார்ந்த அதிகாரங்கள் அல்லது ஜனாதிபதியும் பாராளுமன்றமும்

ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினரல்லாத போதிலும் அவர் சட்டத்துறையுடன் மிக நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளார். இந்த வகையில் ஜனாதிபதியின் சட்டத்துறை சார்ந்த கடமைகளையும், பணிகளையும் பின்வருமாறு சுருக்கமாக தொகுத்துக்கூறலாம்.

(அ) யாப்பின் 32(3) சரத்தின்படி ஜனாதிபதி அவரின் பதவியின் நிமித்தம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்திற்கு செல்வதற்கும் 32(4) பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும் அதற்கு சமாச்சாரம் அனுப்புவதற்கும் உரித்துடையவராவார்.

(ஆ) யாப்பின் 33(அ), (ஆ) சரத்தின்படி பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன்றினதும் ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் அரசாங்க கொள்கை விளக்க உரையை வாசித்தல் 33(ஆ) சடங்கு முறையான அமர்வுகளில் தலைமைத்தாங்கவும் அதிகாரமுடையவர்.

(இ) யாப்பின் 42(3) ஜனாதிபதி அவரது கருத்துப்படி பாரானுமற்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கைப் பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரை பிரதம மந்திரியாக நியமித்தல்.

(ஈ) யாப்பின் 43(உ) ஜனாதிபதி அமைச்சரவையின் உறுப்பினராகவும் அதன் தலைவராகவும் விளங்குகின்றார். இந்த வகையில் அமைச்சரவை ஊடாக பாராளுமன்றத்தின் சட்டவாக்க விடயங்களில் செல்வாக்கு செலுத்த முடியும்.

(உ) யாப்பின் 65(1) சரத்தின்படி உறுப்புரை 41 (அ) ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தை நியமித்தல்.

(ஊ) யாப்பின் 70(1) ஜனாதிபதி காலத்திற்கு காலம் பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தை கூடுமாறு அழைக்கலாம், அமர்வுகளை நிறுத்தலாம், அத்துடன் கலைக்கலாம்.

(எ) ஆயினும் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தின் மூலம் ஜனாதிபதியை வேண்டினாலொழிய அதனது முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகளும் ஆறு மாதங்களுக்கும் குறையாத காலப்பகுதியொன்று முடிவடையும் வரை ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க முடியாது.

(ஏ) யாப்பின் 85(2) ஜனாதிபதி அவரது தற்றுணிவின்படி பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் சட்ட மூலத்தை மக்கள் தீர்ப்பதன் மூலம் மக்களுக்கு சமர்ப்பித்து சட்டமாக்கிக்கொள்ள அதிகாரம் பெற்றுள்ளார்.

## இரண்டாம் குடியரசு சட்டத்துறை

1978 இரண்டாம் குடியரசு யாப்பின் சட்டத்துறை பாராளுமன்றம் என அழைக்கப்படுகின்றது. ஓரங்க சபையை உள்ளடக்கியதாகும். அதன் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும். இந்த வகையில் இரண்டாம் குடியரசு யாப்பின் சட்டத்துறையான பாராளுமன்றத்தின் அமைப்பு. அதிகாரம், கடமைப் பொறுப்புக்கள் மற்றும் அதன் நிலை தொடர்பாக பின்வருமாறு சுருக்கமாக ஆராயலாம்.

**(ஸ)** அமைவுச் சேர்க்கை
இரண்டாம் குடியரசு சட்டத்துறை பாராளுமன்றம் என அழைக்கப்படுகின்றது. இப்பாராளுமன்றம் ஓரங்க சபையையுடையதாகும். இவ் யாப்பின் ஓஆம் அத்தியாயத்தின் 62(1) சரத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 என குறிப்பிடுகின்றது. 62(2) பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். யாப்பின் 99 சரத்தின்படி பாராளுமன்ற தேர்தலானது விகிதாசார முறையில் பட்டியல் முறையின் கீழ் நடைபெறும். பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் 225 பேரில் 29 பேர் தேசிய ரீதியில் கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப நியமிக்கப்படும் தேசிப்பட்டியல் உறுப்பினர்களாவர். ஏனைய 196 உறுப்பினர்களும் விகிதாசார வாக்கு முறையின் அடிப்படையில் மாவட்ட ரீதியில் 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

யாப்பின் 64(1) சரத்தின்படி பாராளுமன்றமானது, ஒரு பொதுத்தேர்தலின் பின்னரான அதன் முதலாவது கூட்டத்தின்போது சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித்தலைவர், ஆகியோர்களைத் தெரிவுசெய்துக் கொள்ளும் 64(5) சபாநாயகர், அல்லது அவர் இல்லாதபோது பிரதிச்சபாநாயகர் அல்லது அவர்கள் இருவரும் இல்லாதபோது குழுக்களின் பிரதித்த தலைவர் பாராளுமன்ற அமர்வுகளின் போது தலைமைத்தாங்குவார். மேற்கூறியவர்களுள் எந்தவொருவரும் இல்லாதவிடத்து அந்த அமர்வுகளுக்கெனப் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் பாராளுமன்றத்தின் அமர்வுகளின் போது தலைமைத் தாங்குதல் வேண்டும்.

யாப்பின் 70(2) சரத்து ஒவ்வொரு வருடமும் குறைந்தது வருடத்தில் ஒரு தடவையாவது பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும். (73) பாராளுமன்றத்தின் கூட்ட நடப்பெண் 20 ஆகும். (79) பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டமூலம் (சட்டத்தின் பெயர்) பாராளுமன்றத்தினால் பெரும்பான்மை

வாக்குகளினால் முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளது என சான்றுரைப்படுத்தல் வேண்டும். அதன்பின் அது சட்டமாகும்.

**(ை)** பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம்

இரண்டாம் குடியரசு யாப்பின் 11ஆம், 12ஆம் அத்தியாயங்கள் பாராளுமன்றத்தின் சட்டமாக்கற் தத்துவம் பற்றி குறிப்பிடுகின்றன. அவற்றை பின்வருமாறு சுருக்கமாக தொகுத்துக் குறிப்பிடலாம்.

(அ) நாட்டின் நல்லாட்சியையும், அமைதியையும் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டங்களைப் பிறப்பிப்பதற்கு அதிகாரம் பெற்று விளங்குகின்றது. இந்த வகையில் சாதாரண சட்டம் முதல் சகலவிதமான சட்டங்களையும் கொண்டுவந்து நிறைவேற்றிக்கொள்ள அதிகாரம் பெற்றுள்ளது.

(ஆ) வரவு செலவு திட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

(இ) யாப்பின் 148ஆம் சரத்தின்படி பாராளுமன்றமானது பகிரங்க நிதிகளின் மீது கட்டுப்பாட்டு அதிகாரத்தைப் பெற்றுள்ளது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி எந்தவோர் சபையும் வரிகளை விதிக்கவோ அல்லது வேறு ஏதேனும், அறவீடுகள், செலவுகளை மேற்கொள்ளவோ முடியாது.

(ஈ) யாப்பின் 75ஆம் சரத்தின்படி கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்கொண்ட சட்டங்களை இயற்றுவதற்கும் பாராளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

(உ) யாப்பின் 82(5) பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் அரசியல் அமைப்பு திருத்தங்களை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது.

(ஊ) 76(1) பாராளுமன்றம் அதன் சட்டமாக்கற்றத்துவத்தை துரத்தலோ பாராதீனப்படுத்தலோ ஆகாது என்பதுடன் சட்டவாக்க அதிகாரத்தைப் பிரயோகிக்கும் வேறு நிறுவனங்களை நிறுவவும் முடியாது. இதன்படி பாராளுமன்றம் சட்டவாக்க அதிகாரத்தை முழுமையாக பிரயோகிப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

(எ) 38(2) பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரனை ஒன்றை சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவதன் மூலம் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

(ஏ) மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சட்டவாக்கம் செய்யவும் பாராளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

(ஐ) இரண்டாம் குடியரசு யாப்பில் நீதித்துறை சட்டப் புனராய்வு அதிகாரத்தைப் பெறவில்லை. இதன்படி பாராளுமன்றம் பிறப்பிக்கும் சட்டங்களை நீதித்துறை கேள்விக்கிடமாக்க முடியாது.

## விகிதசமப் பிரதிநிதித்துவம்

நவீன ஜனநாயக அரசியல் முறை பிரதிநிதித்துவ ஜனநாயக முறையினை அடிப்படையாக் கொண்டே செயற்படுகின்றது. பிரதிநிதித்துவ ஜனநாயக முறையினை நடைமுறைப்படுத்தும் ஒரு வழிமுறை என்ற வகையில் விகிதசமப் பிரதிநிதித்துவ முறையினை (PR முறையை) அறிமுகம் செய்யலாம். எளிய பெரும்பான்மை முறையிலுள்ள பலவீனங்களைத் தவிர்த்து மிகவும் பரந்த அடிப்படையில் மக்கள் அபிப்பிராயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை இலக்காகக் கொண்டு வகுக்கப்பட்ட ஒரு முறையே விகிதசமப் பிரதிநிதித்துவ முறையாகும். ஒரு தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும் குழுக்களும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப அக்கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் ஆசனங்களைப் பெற்றுக் கொடுக்கும் சில வகையான உபாயங்களைக் கொண்ட ஒரு பிரதிநிதித்துவ முறையே விகிதசமப் பிரதிநிதித்துவ முறையாகும். இம் முறை தனிமாற்று வாக்கு முறை (STV) மற்றும் பட்டியல் முறை என்ற இரு பிரதான முறைகளைக் கொண்டுள்ளது. இவ்விரு முறைகளையும் நடைமுறைப்படுத்துவதில் சில வேறுபாடுகள் காணப்படினும் பொதுவாக அவை சில நிறைகளையும் முறைகளையும் கொண்டுள்ளன.

## விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் பண்புகள்

(அ) நாடு முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகவோ அல்லது பல அங்கத்துவ தேர்தல் தொகுதிகளாகவோ பிரிக்கப்பட்டிருத்தல்.

(ஆ) வேட்பாளர்கள் அரசியல் கட்சி சார்பாகவோ அல்லது சுயேட்சை குழுக்களாகவோ போட்டியிடுதல் இது தொடர்பான பட்டியல் முறை பின்பற்றப்படுகின்றது.

(இ) வாக்காளன் கட்சிக்கு வாக்களிப்பதோடு விருப்பத் தெரிவுகளை கட்சிப்பட்டியலில் உள்ள வேட்பாளர்களுக்கு வழங்குவார்.

(ஈ) கட்சிகளும் சுயேட்சைக் குழுக்கமும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்துக்கு ஏற்ப அவற்றுக்கிடையில் ஆசனங்களைப் பகிர்ந்தளித்தல்.

(உ) வெற்றிடங்களை நிரப்பும்போது பட்டியலில் எஞ்சியிருப்பவர்களுள் ஒருவரை நியமித்தல்.

(ஊ) பொதுசன அபிப்பிராயம் சிறந்த முறையில் வெளிப்படுத்தக் கூடியதாக இருத்தல்.

## விகிதசமப் பிரதிநிதித்துவ முறையின் நிறைகள்

1. விகிதசமப் பிரதிநிதித்துவ முறை ஜனநாயகத்தன்மை வாய்ந்ததாகும்.
2. சகல பலம் வாய்ந்த அபிப்பிராங்களுக்கு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுக்கின்றது.
3. பல்லின சமூக முறையில் பெரும்பான்மை இனம் மட்டுமன்றி சிறுபான்மை இனங்களும் நியாயமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளும்.
4. எளிய பெரும்பான்மை முறையை போன்று வாக்குகள் வீண்விரயம் ஆவதில்லை.
5. வாக்காளர்களின் விருப்பு பரந்ததாக காணப்படுதல்.
6. சமமான பிரதிநிதித்துவம் அதாவது அதி பிரதிநிதித்துவமோ குறை பிரதிநிதித்துவமோ ஏற்படுவதில்லை.
7. பிரதான அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் குறைதல்.
8. வாக்காளர்களுக்கும் பிரதிநிகளுக்குமிடையில் தொடர்பு குறைவதால் பிரதிநிதிகள் வாக்காளர்களின் செல்வாக்குக்கு உட்படுவதிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாகச் செயற்பட முடிதல்.
9. இடைத் தேர்தல்கள் நடைபெறாமையால் காலமும் பணமும் வீண்விரயமாவதில்லை.
10. தேர்தல் ஊழல் குறைவதிலும் வாக்காளர்களின் உத்வேகம் அதிகரிப்பதிலும் விகித சமப் பிரதிநிதித்துவ முறை தாக்கம் புரிகின்றது.

## விகிதசமப் பிரதிநிதித்துவ முறையின் குறைகள்

1. பல கட்சி முறை வளர்ச்சியுறுவதற்குக் காரணமாக அமைதல்.
2. கூட்டரசாங்கம் உருவாகுதலும் அவை பலவீனமான அரசாங்கமாக இருத்தலும்.
3. அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் ஆதிக்கம் வளர்ச்சியுறுதல்.
4. வாக்காளர்களுக்கும் பிரதிநிதிகளுக்குமிடையிலான தொடர்பு சேய்மையானதாக மாறுவதனால் பிரதிநிதிகள் வாக்காளர்களுக்குப் பொறுப்புக் கூறுவதிலிருந்து விடுபட முடிதல்.
5. உறுப்பினர் தெரிவில் கணித ரீதியான முறைகள் பின்பற்றப்படுவதனாலும் வாக்களிக்கும் முறை சிக்கல்மிக்கதாகக் காணப்படுவதனாலும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியாமை.
6. நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுதல்.
7. வெட்டுப் புள்ளி முறை போனஸ் ஆசனம் வழங்கப்படுதல் போன்றவற்றால் விகிதாசாரமும் ஜனநாயகமும் பாதிக்கப்படுதல்.
8. இடைத் தேர்தல்கள் நடைபெறாமையால் மக்கள் பங்கேற்புக்கான வாய்ப்பு குறைவதோடு இரு பொதுத்தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் பொதுஜன அபிப்பிராயத்தை அளவிட்டு அறிய முடியாமை.
9. குறைந்த அரசியல் அறிவும் பலவீனமான அரசியல் கலாசாரமும் நிலவும் அரசியல் சமூகங்களில் விகிதசமப் பிரதிநிதித்துவ முறையைச் சிறப்பாக நடாத்த முடியாமை.

# 1978 அரசியல் அமைப்பின் 13ஆம் திருத்தம்

1980 தசாப்தங்களில் இலங்கையின் இனமோதல் உக்கிரநிலையை அடைந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சமாதானத்தை ஏற்படுவதற்கான தீர்வு யோசனையாக 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இதற்கமைய அரசியல் அமைப்பின் 13ஆம் திருத்தம் 1987.11.14ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம்.

- அதிகார பகிர்வு முறையொன்றாக மாகாணசபை முறையை ஏற்படுத்துதல்.
- சிங்கள மொழியோடு தமிழ் மொழியையும் அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்தல்.

மாகாண சபை முறையைத் ஸ்தாபிப்பதில் பின்வரும் காரணிகள் பாதிப்புச் செலுத்தின.

(i) வடகிழக்கு தமிழ் பிரிவினைவாத யுத்தத்துக்கு அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் அதிகாரங்களை பரவலாக்க வேண்டும் என்பது தொடர்பான நிபந்தனை.
(ii) ஆட்சி விடயங்களில் பிரதேச மக்களை பங்கேற்கச் செய்தல்.
(iii) பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதும் செயற்திறனைக் கூட்டுவதுமாகும்.

13ஆம் திருத்தத்தின் அடிப்படை பண்புகள்

இலங்கையில் ஒன்பது மாகாணங்களிலும் ஒவ்வொரு மாகாணசபை உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள மாகாணங்களின் எல்லைகள் மாகாண சபைகளின் எல்லைகளாக அமையும். 1988இல் முதன் முதலாக மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. அதன்போது வடகிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டு வடகிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டது. ஆனால் தற்போது 2008ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றின் பின்னர் மீண்டும் வடகிழக்கு மாகாணங்கள் தனியாக பிரிக்கப்பட்டுள்ளன. தற்போது இலங்கையில் ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது மாகாணசபைகள் உள்ளன.

,லங்கையின் ஒன்பது மாகாண சபைகள்

1. மேல்மாகாணம் - கொழும்பு, கம்பஹா, களுத்துறை
2. தென்மாகாணம் - காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை
3. கிழக்கு மாகாணம் - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை
4. வட மாகாணம் - யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி
5. வடமத்திய மாகாணம் - அநுராதபுரம், பொலன்னறுவை
6. மத்திய மாகாணம் - கண்டி, மாத்தளை, நுவரெலியா
7. வடமேல் மாகாணம் - புத்தளம், குருணாகல்
8. சப்ரகமுவ மாகாணம் - கேகாலை, இரத்தினபுரி
9. ஊவா மாகாணம் - பதுளை, மொனராகலை

1978ஆம் யாப்பில் விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி 1988ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம், மற்றும் அது தொடர்பான திருத்தங்கள் மூலம் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாகாணங்களிலுமுள்ள மாவட்டங்கள் தனித்தனி தேர்தல் பிரதேசங்களாக கருதப்படும். ஒவ்வொரு மாகாண சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த மாவட்டங்களின் சனத்தொகை, பரப்பளவு ஆகிய காரணிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. மாகாண சபைகளின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும்.

ஒவ்வொரு மாகாணங்களுக்கும் ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஆளுநர் ஒருவரை ஜனாதிபதி நியமனம் செய்கின்றார். ஆளுனரின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும். ஜனாதிபதியின் நம்பிக்கையை பெற்றிருக்கும் வரை ஆளுனர் அப்பதவியில் இருப்பார்.

# 1978 அரசியல் அமைப்பின் 17ஆம் திருத்தம் - **17th Amendment**

1978 இரண்டாம் குடியரசு யாப்பு 2001ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சி காலப்பகுதியில் அவரது பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் (PA) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இணைந்து செயற்பட JVP யும் கொண்டுவந்த யாப்பு திருத்தமே 17ஆம் திருத்தமாகும்.

இரண்டாம் குடியரசு யாப்பில் தாபிக்கப்பட்ட ஜனாதிபதி முறை பலத்த விமர்சனங்களுக்கு உட்பட்டது ஜனநாயக ஆடை போர்த்தப்பட்ட சர்வதிகார பதவி என அதன் அதிகாரங்கள் சுட்டிக்காட்டப்பட்டது. ஜனாதிபதி தன்னிச்சையான முறையில் தற்துணிவு அதிகாரத்தை பிரயோகிப்பதன் காரணமாக பகிரங்க சேவை, நீதிச்சேவை மற்றும் பொலிஸ் ஆகிய அரச சேவைகளின் சுயாதீனத் தன்மையும், பக்கச் சார்பற்ற தன்மையும் இல்லாதொழிந்து இவை வேகமாக அரசியல் மயமாக்கத்திற்குட்பட்டுக் கொண்டிருக்கின்றன என விமர்சிக்கப்பட்டன. இந்நிலைமையை சீராக்கும் நோக்கில் 2001இல் 17ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

2001 அக்டோபர் மாதம் 3ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 17ஆம் திருத்த மசோதா 208 (2/3) வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம் பகிரங்கசேவை, பொலிஸ் மற்றும் நீதித்துறை என்பவற்றின் சுயாதீனத்தை பாதுகாத்து பேணுவதோடு பொதுச்சேவை மீது ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள் மீது சில வரையறைகள் ஏற்படுத்தப்பட்டது.

17ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பிரதான மாற்றங்கள்:-

1. அரசியல் அமைப்பு பேரவை:-
   நிறைவேற்று ஜனாதிபதியின் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை வரையறுக்கும் வகையில் அரசியல் அமைப்பு பேரவை தாபிக்கப்பட்டது.
   41அ(1)அரசியல் அமைப்பு பேரவை 10 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. அதன் தலைவராக சபாநாயகர் செயற்படுவார்.
   1. சபாநாயகர்
   2. பிரதமர்
   3. எதிர்கட்சி தலைவர்
   4. ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவர்
   5. பிரதமராலும் எதிர்க்கட்சித் தலைவராலும் பெயர் குறிப்பிட்டடு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள்.
   6. பிரதமரினதும் எதிர்கட்சி தலைவரினதும் கட்சியை சாராத பாராளுமன்றிலுள்ள ஏனைய (சிறிய) கட்சிகளால் பெயர் குறிப்பிட்டு ஜனாதிபாதியால் நியமிக்கப்படும் ஒரு உறுப்பினர்.

அரசியல் அமைப்பு பேரவை பின்வரும் இரண்டு கடமைகளை மேற்கொன்றது.

(i) பின்வரும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கவேண்டிய ஆட்சிகளின் பெயர்களை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்தல்.
   - (அ) தேர்தல் ஆணைக்குழு
   - (ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு
   - (இ) தேசிய பொலிஸ் ஆணைக்குழு
   - (ஈ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
   - (உ) இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு
   - (ஊ) நிதி ஆணைக்குழு
   - (எ) எல்லை நிர்ணய ஆணைக்குழு

மத்திய கல்லூரிக் கல்விச் சேவை

(ii) ஜனாதிபதியால் நியமிக்கப்படும் (சிபார்சு செய்யப்படும்)
பின்வரும் உறுப்பினர்களை அரசியல் அமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்குதல்.
   (அ) பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்றின் ஏனைய நீதியரசர்கள்.
   (ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவரும் ஏனைய நீதியரசர்களும்.
   (இ) நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்
   (ஈ) சட்டமா அதிபர்
   (உ) கணக்காய்வாளர் நாயகம்
   (எ) ஒம்புட்ஸ்மன்
   (ஏ) பாராளுமன்றின் செயலாளர் நாயகம்

மேற்கூறிய வகையில் அட்டவணை (i) இல் தலைவரையும் உறுப்பினர்களையும் நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு அரசியல் அமைப்புப் பேரவை சிபார்சு செய்யும். அவ்வாறே அட்டவணை (ii) இல் உறுப்பினர்களை அரசியல் அமைப்பு பேரவையின் அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் ஜனாதிபதி நியமனம் செய்ய வேண்டும்.

2. ஏற்கனவே இருந்த சில ஆணைக்குழுக்களுக்கு மேலதிக அதிகாரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
   Eg: நீதிச்சேவை ஆணைக்குழு, பகிரங்க சேவை ஆணைக்குழு

3. நிர்வாக மேன்முறையீட்டு சபை என்ற நிறுவனம் தாபிக்கப்பட்டது.

4. புதிய சில ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டன.
   Eg: தேசிய பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு

இவ் 17ஆம் திருத்தம் எதிர்பார்த்த நோக்கை நிறைவேற்றவில்லை. இத்திருத்தச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட முக்கிய நிறுவனமான அரசியல் அமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் நியமிக்கப்படாமையின் காரணமாக 2005 ஆகும்போது அது முழுமையாக செயற்பாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு எந்த தினத்திலும் நியமிக்கப்படவில்லை. பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், பொலிஸ் பகிரங்க சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை ஜனாதிபதி தன்னிச்சையாக நியமித்தமை போன்ற உதாரணங்களை எடுத்துக்காட்டலாம்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# 1978 அரசியல் அமைப்பின் 18ஆம் திருத்தம் - 18th Amendment

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் முன்னணி (UPFA) அரசாங்கம் 2010 செப்டம்பர் மாதம் 08ஆம் திகதி 161 (2/3) வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட திருத்தமே 18ஆம் திருத்தம் என அழைக்கப்படுகின்றது. அப்போதைய பிரதம மந்திரி னு. ஆ. ஜயரத்ன இம் மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இம் மசோதாவுக்கு ஆதரவாக 161 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டன. UNP (46) வாக்களிப்பில் கலந்துகொள்ளாது வெளிநடப்பு செய்தது. எனவே 144 மேலதிக வாக்குகளால் 18ஆம் திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

18ஆம் திருத்தத்தின் பிரதான மாற்றங்கள்

18ஆம் திருத்தத்தின் மூலம் மூன்று பிரதான மாற்றங்கள் செய்யப்பட்டன.

1. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இரண்டு தவணைகள் என்ற வரையறை நீக்கப்பட்டமை.
2. 17ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பு பேரவை இல்லாதொழிக்கப்பட்டு பாராளுமன்ற பேரவை கொண்டுவரப்பட்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டமை.
3. சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை.

1. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இரண்டு தவணைகள் என் வரையறை நீக்கப்பட்டமை.

   மூல யாப்பில் 31ஆம் சரத்தின் (2) ஆம் பந்தி "ஜனாதிபதி பதவிக்கு மக்களால் இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆளெவரும் அதன்பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவர் ஆகார்" என்ற உறுப்புரை 18ஆம் திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டது. இதன்மூலம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வரையறை நீக்கப்பட்டது. ஒருவர் எத்தனை தடவைகளும் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம்.

   மேலும் அரசியல் அமைப்பின் 32(3)ஆம் உறுப்புரை நீக்கப்பட்டு அதற்கு பதிலாக 32(3) புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அவரது பதவியின் நிமித்தம் மூன்று மாதங்களுக்கொருத்தடவை பாராளுமன்றத்துக்கு வருகைதருதல் வேண்டும். இதன் மூலம் பாராளுமன்றத்தின் ஜனாதிபதியின் நிலை மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

2. அரசியல் அமைப்பு பேரவைக்குப் பதிலாக பாராளுமன்றப் பேரவை உருவாக்கப்பட்டிருத்தல்
   பாராளுமன்றப் பேரவை ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது.
   1. சபாநாயகர்
   2. பிரதம மந்திரி
   3. எதிர்க்கட்சித் தலைவர்
   4. பிரதமரால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்
   5. எதிர்க்கட்சி தலைவரால் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்

பிரதம மந்திரியாலும் எதிர்க்கட்சி தலைவராலும் நியமிக்கப்படும் உறுப்பினர் மேலேயுள்ள (அ), (ஆ), (இ) உறுப்பினர்களின் இனத்தை சாராதவராக இருத்தல் வேண்டும் என யாப்பு குறிப்பிடுகின்றது.

ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் தொடர்பான சிபார்சு செய்வதற்கும் அங்கீகரிப்பதற்கும் அரசியல் அமைப்பு பேரவை பெற்றிருந்த அதிகாரம் பாராளுமன்ற பேரவைக்கு வழங்கப்படவில்லை.

3. சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை.

   சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களையும் அதன் உறுப்பினர்களையும் நியமிக்கும்போது ஜனாதிபதி பாராளுமன்ற பேரவையின் சம்மதத்தை கோர வேண்டுமாயினும் அவர் அதற்கு கட்டுப்பட்டவரல்ல. அவதானிப்பினை கவனத்தில் கொள்ளாது ஜனாதிபதி தமது தற்துணிவின் பிரகாரம் தமக்கு தேவையானவாறு இப்பதவி நியமனங்களை மேற்கொள்ள முடிந்தது.
   பொலிஸ் மா அதிபரை நியமித்தல், ஜனாதிபதியின் நேரடி பொறுப்பின் கீழ் வந்ததோடு தேர்தல் ஆணைக்குழு பகிரங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு என்பவற்றின் அதிகாரங்கள் எல்லையற்றவாறு குறைக்கப்பட்டது.

   இலாகா தலைவர்களை நியமித்தல், பதவி உயர்த்துதல், ஒழுக்கக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் செய்தல் ஆகிய பொறுப்புக்கள் அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டது.

முடிவுரை:-
18ஆம் திருத்தச் சட்டத்தை ஜனநாயகத்துக்கு எதிரான பலமான தாக்குதல் என்ற வகையில் விளக்கினர். சில விமர்சகர்கள் இந்த திருத்தத்தின் விளைவாக சுயாதீன பகிரங்கச் சேவை வீழ்ச்சியடைந்தது என சுட்டிக்காட்டினர். நீதித்துறையின் சுதந்திரமும் சட்டத்தின் ஆட்சியும் வீழ்ச்சியுற்றதோடு சட்டத்துறை நிறைவேற்றுத் துறையின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது என விமர்சிக்கின்றனர்.

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

# இரண்டாம் குடியரசு யாப்பின் 19ஆம் திருத்தம் - **19th Amendment**

2015 ஜனவரி 8ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய நல்லாட்சி அரசாங்கத்தால் 2015.04.28ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யாப்பு திருத்தமே 19ஆம் திருத்தமாகும். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இச்சட்டமூலத்துக்கு ஆதரவாக 215 வாக்குகளும், 1 வாக்கு எதிராகவும், 1 வாக்கு நடுநிலையாகவும் வழங்கப்பட்டதோடு 7 பேர் வாக்களிப்புக்கு சமூகமளித்திருக்கவில்லை. இதன்படி 19ஆம் திருத்தச்சட்டமூலம் 2/3 (215) பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

19ஆம் திருத்தத்தின் சில முக்கிய அம்சங்களாவன:-

1. ஜனாதிபதி பதவியில் ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள்:-
   - மூல யாப்பில் 92(அ) சரத்தின்படி ஜனாதிபதி வேட்பாளரின் குறைந்தபட்ச வயதெல்லை 30 ஆக இருந்தது. 19ஆம் திருத்தச்சட்டம் இதனை 35 ஆக திருத்தியமைத்தது.
   - யாப்பின் 31(2) சரத்து ஜனாதிபதி பதவிக்கு இரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரும் அதன் பின்னர் மக்களால் அத்தகைய பதவிக்கு தெரிவு செய்யப்பட தகமையற்றவராவார். இந்த வரையறை 18ஆம் திருத்தத்தில் நீக்கப்பட்டது. 19ஆம் திருத்தம் ஜனாதிபதி இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியாது என்ற வரையறையை மீண்டும் விதித்துள்ளது.
   - மூலயாப்பில் 30(2) சரத்து ஜனாதிபதி மக்களால் நேரடியாக தெரிவுசெய்யப்படுவார். அவரது பதவிக் காலம் 06 வருடங்களாகும். 19ஆம் திருத்தம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 05 வருடங்களாகக் குறைத்துள்ளது.
   - மூல யாப்பில் 35(2) சரத்துப்படி பாராளுமன்றினால் நிராகரிக்கப்படும் அரசியல் யாப்புச் சட்டமல்லாத வேறும் சட்டம் ஒன்றை மக்கள் தீர்ப்புக்கு விட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தது. 19ஆம் திருத்தம் அவ்வதிகாரத்தை அகற்றியுள்ளது.
   - யாப்பின் 35(1) உறுப்புரை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாமைக்கான விடுபாட்டுரிமையளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 126 உறுப்புரையின் கீழ் அடிப்படை உரிமைமீறல் வழக்கினை தாக்கல் செய்ய முடியும்.

2. பாராளுமன்றம் தொடர்பான திருத்தங்கள்

   மூல யாப்பின் 70(1) உறுப்புரை ஒரு பொதுத்தேர்தல் முடிவுற்று 1 வருட காலம் பூர்த்தியான பின்னரே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான தற்துணிவு அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றிருந்தார். 19ஆம் திருத்தம் பாராளுமன்றத்தின் பதவி காலம் 4 1/2 வருடங்கள் பூர்த்தியான பின்னரே பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியும் என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

   மூல யாப்பின் 62(2) சரத்து 6 வருடங்களாகும் என குறிப்பிட்டது. அதனை 19ஆம் திருத்தம் 5 வருடங்களாக குறைத்துள்ளது.

3. பிரதம மந்திரி மற்றும் அமைச்சரவை தொடர்பான திருத்தங்கள்

   மூல யாப்பின் 47 சரத்தின்படி ஜனாதிபதி தனது தற்துணிவின்படி பிரதமரை பதவி நீக்கம் செய்ய முடியும். 19ஆம் திருத்தத்தின் மூலம் அவ்வதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

   மூல யாப்பில் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கைப்பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால் 19ஆம் திருத்தத்தின் 46(1) சரத்து அது தொடர்பான வரையறையை விதித்துள்ளது. அதன்படி 46(1அ) அமைச்சரவை அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 30 ஐ விட அதிகரித்தலாகாது என்றும் 46(1ஆ) அமைச்சரவை அந்தஸ்து அற்ற மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஐ விட அதிகரித்தலாகாது எனவும் அமைச்சர்கள், மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கையை வரையறுத்துள்ளது.

4. அரசியல் அமைப்பு பேரவை
   - அரசியல் அமைப்பு 41(அ) முதல் (எ) வரையான சரத்து நீக்கப்பட்டு புதிய உறுப்புரை சேர்க்கப்பட்டுள்ளது.

குறிப்பு:-

இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள குறிப்புக்கள் வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள கவனத்தில் கொள்ளவும். இங்கு தரம் 13 பாடதிட்டத்திலுள்ள அலகுகளில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பாட அலகு தொடர்பாக மேலதிகமாக மேலும் தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்த கால அரசியல், விஞ்ஞான வினாவிடை புத்தகம்
- புள்ளியிடும் திட்டம் - இலங்கை பரீட்சைத் திணைக்களம், G. C. E. (A/L) அரசறிவியல்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, தரம் 3 – தேசிய கல்வி நிறுவகம்.
- அரசறிவியல்

மாதிரி வினாக்கள்

4. இரண்டாம் குடியரசு ஜனாதிபதியை பின்வரும் தலைப்புகளில் விளக்குக.
   (i) தெரிவு முறை
   (ii) பதவி நீக்கம் செய்யும் முறை

5. இரண்டாம் குடியரசு ஜனாதிபதியை பின்வரும் தலைப்புகளில் விளக்குக.
   (i) ஜனாதிபதியும் சட்டத்துறையம்
   (ii) ஜனாதிபதியும் நிறைவேற்றுத் துறையும்
   (iii) ஜனாதிபதியும் நீதித்துறையும்
   (iv) ஜனாதிபதியும் அமைச்சரைவயும்

6. 1978 சட்டத்துறையின் அமைப்பு மற்றும் அதிகாரங்களை விளக்குக.

7. 1978 யாப்பின் கீழ் பாராளுமன்ற தேர்தல்

8. 1978 நீதித்துறையின் கட்டமைப்பும் அதிகாரங்களும்

9. 1978 யாப்பின் கீழ்
   (i) ஒம்புட்ஸ்மன்
   (ii) மக்கள் தீர்ப்பு

10. 1978 யாப்பின் கீழ்

11. (i) 13வது திருத்தம்
   (ii) 17வது திருத்தம்
   (iii) 18வது திருத்தம்
   (iv) 19வது திருத்தம்
   (iv) 20வது திருத்தம்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் - 20th Amndment

ஸ்ரீ லங்கா பொதுஜன பெறமுன (SLPP) 2019 ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களின் போது தாம் ஆட்சிக்கு வந்தால் 20ம் திருத்தத்தை கொண்டு வருவதாகவும் அதற்கான மக்கள் ஆணையை வழங்குமாறும் பிரசாரம் செய்தது. அதன்படி SLPP ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு யாப்புத் திருத்த பிரேரணையை கொண்டுவந்து, நீதி அமைச்சர் அலி சப்ரி இப்பிரேரணையை 2020.09.22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அரசியல் அமைப்புக்கான இருபதாவது திருத்தம் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவெற்றப்பட்டு 2020 அக்டோபர் 29ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. இதுவே 20ஆம் திருத்தம் என அழைக்கப்படுகின்றது.

20ஆம் திருத்தத்தில் காணப்படுகின்ற சில பிரதான அம்சங்களை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

- ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் வயது 35இல் இருந்து 30 ஆக திருத்தப்பட்டுள்ளது. 92(அ).

- ஜனாதிபதியின் தத்துவங்களும் பணிகளும் தொடர்பான 33ஆம் உறுப்புரை நீக்கப்படடு புதிய உறுப்புரை சேரக்கப்பட்டுளது. (33ஆம் உறுப்புரை).

- அரசியல் அமைப்பின் அத்தியாயம் VII அ(1) நீக்கப்பட்டு புதிய உறுப்புரை சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி 19ஆம் திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட ‘‘அரசியல் அமைப்பு பேரவை’’ நீக்கப்பட்டு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ‘‘பாராளுமன்ற பேரவை’’ கொண்டுவரப்பட்டுள்ளது.

- அரசியல் அமைப்பின் அத்தியாயம் VIII நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய அத்தியாயம் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படவில்லையாயினும் அமைச்சர்களின் நியமனம், மாற்றம், நீக்கம் தொடர்பாக ஜனாதிபதியின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- பொதுச்சேவை மற்றும் முப்படைகளின் தலைவர்கள், பாராளுமன்ற செயலாளர் நியமனம் தொடர்பாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் பலப்படுத்தப்படடுள்ளன. (61(உ), 41அ(1), 65(1).

- 19ஆம் திருத்தத்தில் பாராளுமன்றத்தின் பதவி காலம் 4 ½ வருடம் பூர்த்தியான பின்பே ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கலாம் என்ற ஏற்பாடு 70(1) சரத்தின்படி 20ஆம் திருத்தத்தில் அதன்பதவிக்காலம் 2 ½ வருடங்கள் பூரணமாகியதன் பின்னரே கலைக்கலாம் என திருத்தப்பட்டுள்ளது.

- பாராளுமன்றம் நிராகரித்த சட்ட மசோதாவொன்றை 85(2) படி மக்கள் தீர்ப்புக்கு விட ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## பகுதி – B

1. இரண்டாம் குடியரசு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் 2 தருக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

2. 1978 யாப்பின் படி ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவரக்கூடிய குற்றச்சாட்டுகள் இரண்டைக் குறிப்பிடுக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

3. 1978 ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

4. 1978 ஜனாதிபதியின் நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் 2 தருக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

5. 1978 பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் இரண்டு தருக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

6. 1978 உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் 2 தருக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

7. 1978 யாப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் 2 தருக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

8. 1978 யாப்பின் 20ஆம் திருத்தத்தின் முக்கிய திருத்தங்கள் 2 தருக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

9. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் நிறைகள் 2 தருக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

10. 1978 யாப்பின் 13வது திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட இரண்டு அம்சங்களைத் தருக.

   (i) ……………………………………………………………………………………………

   (ii) ……………………………………………………………………………………………

# அலகு - 13

## இலங்கையின் அரசியல் கட்சிமுறைமை

இலங்கையில் பிரித்தானிய காலணித்துவ ஆட்சியின் போது குறிப்பாக 1833 கோல்புறூக் சீர்திருத்தத்தின் பின்னர் அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கான அடிதளமிடப்பட்டது. 1931இல் சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டாலும் பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற முறை முழுமையாக அறிமுகப்படுத்தப்படவில்லை. எனவே கட்சிகளின் தோற்றத்துக்கு உடனடி தூண்டுகோலாக அமையவுமில்லை. 1928இல் A. E. குணசிங்கவினால் தொழிற்கட்சி என்ற பெயரில் ஒரு கட்சி உருவாக்கப்பட்டபோதும் அது ஓர் அரசியற் கட்சிக்குறிய பண்புகளைக் கொண்டதாக அமையவில்லை. இதனால் முதலாவது கட்சியாக தொழிற்கட்சியை அறிஞர்கள் கருதவில்லை.

இலங்கையின் முதலாவது அரசில் கட்சியான லங்கா சமசமாஜக்கட்சி LSSP 1935இல் தோற்றம் பெற்றது. இதனைத் தொடர்ந்து இலங்கை இந்திய காங்கிரஸ் (1939), கம்யூனிச கட்சி CP (1943), அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ACTC (1944)), ஐக்கிய தேசிய கட்சி UNP (1946), இலங்கை தமிழரசுக் கட்வி (1949), ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி SLFP (1951) என அரசியல் கட்சிகளின் தோற்றத்தை காணக்கூடியதாக உள்ளது. தற்போது (2021) 67 கட்சிகளுக்கும் மேல் தோற்றம் பெற்றுள்ளது.

இலங்கையில் கட்சிகளின் வகைகள்

இலங்கையில் செயற்படும் அரசியல் கட்சிகளை அவற்றின் கொள்கைகளின் அடிப்படையில் மூன்று வகைகளாக பிரிக்கலாம்.

(அ) இடதுசாரிக் கட்சிகள்

(ஆ) வலதுசாரிக் கட்சிகள்

(இ) இனரீதியான கட்சிகள் / பிரதேச ரீதியான கட்சி

(அ) இடதுசாரிக் கட்சிகள்

இடதுசாரிச் சிந்தனையாளர்களான கார்ள்மாக்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஸ்ராலின், ரொஸ்கி, மாவோசேதுங் போன்றவர்களின் கொள்கைகளைப் பின்பற்றும் கட்சிகளை இடதுசாரிக் கட்சிகள் எனலாம். இலங்கையின் ஆரம்பகால இடதுசாரிக் கட்சிகளை தேசிய இயக்கத்தின் தீவிரவாதப் பிரிவாகவும் அடையாளம் காணமுடியும்.

இலங்கையில் இடதுசாரி கட்சிகள் தோற்றம் பெற பின்வரும் காரணிகள் அடிப்படையாக அமைந்தன.

- காலணித்துவ பொருளாதாரம் காரணமாக தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சி
- 1930களின் ஆரம்பத்தில் நிலவிய பொருளாதார மந்த நிலை.
- சுதந்திரப் போராட்டத்தினை தீவிரமாக முன்னெடுத்தலும் சமவுடமைச் சமூகமொன்றை கட்டியெழுப்புதல்.
- ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தினரில் சிலர் மேற்கத்திய கல்வி கற்றவர்கள் இடதுசாரி அரசியல் ஆர்வம் காட்டியமை காரணமாக இலங்கையில் இடதுசாரி கட்சிகள் தோற்றம் பெற வழிவகுத்தது.

(ஆ)வலது சாரிக் கட்சிகள்

முதலாளித்துவ அரசியல், பொருளாதார கொள்கைகளே வலதுசாரிக் கொள்கைகள் எனப்படுகின்றன. இவ் வலதுசாரிக் கொள்கைகளைப் பின்பற்றும் கட்சிகளை வலதுசாரிக் கட்சிகள் எனலாம். இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் வலதுசாரிக் கொள்கைகளைப் பின்பற்றுவதால் வலதுசாரிக் கட்சிகளின் வகைக்குள்ளேயே அக்கட்சிகளை அரசியல் ஆய்வாளர்கள் அடக்குகின்றனர். இதில் ஐக்கிய தேசியக்கட்சி கூடிய வலதுசாரித் தன்மை கொண்ட கட்சியாகவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி குறைந்தளவு வலதுசாரித்தன்மை கொண்ட கட்சியாகவும் உள்ளன.

(இ) இன ரீதியான கட்சிகள் மற்றும் பிரதேச ரீதியான கட்சிகள்

ஓர் இனத்தின் மத்தியில் அல்லது பிரதேசத்தின் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த கட்சிகளே இன ரீதியான கட்சிகள் அல்லது பிரதேச ரீதியான கட்சிகள் என அழைக்கப்படுகின்றன.

இன ரீதியான அரசியல் கட்சிகளுக்கு உதாரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லீம் கட்சி. முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி என்பவற்றை கூறலாம்.

## இலங்கையின் அரசியல் கட்சி முறைமை

இலங்கையின் கட்சி முறைமையை ஆராய்கின்றபோது இரு கட்சி முறைக்குள்ளோ அல்லது பல கட்சி முறைக்குள்ளோ அடக்க முடியாது உள்ளது. ஏனெனில் பிரித்தானிய, அமெரிக்க கட்சி முறைமையை போல இலங்கையில் இரு பிரதான கட்சிகள் இரண்டும் தனித்து பெரும்பான்மையை பெற்று அரசாங்கத்தை அமைப்பது இல்லை. எனவே இதனை இரு கட்சி முறைமை என கூறமுடியாது. அதே நேரம் பிரான்ஸ் அல்லது இந்தியாவில் போல பல கட்சிகள் சேர்ந்து அரசாங்கத்தை அமைக்க கூடிய நிலையும் இங்கில்லை. எனவே இதனை பல கட்சி முறைமை எனவும் கூற முடியாது. சுதந்திரம் கிடைத்தது முதல் 1948இல் இருந்து இன்றுவரை UNP யும், SLFP யும் மாறி மாறி அரசாங்கத்தை அமைத்து வருகின்றது. 1948 - 1956, 1964 - 1970, 1978 - 1994, 2001 - 2004, 2015 - இன்றுவரை (2019) UNP யும், 1956 - 1964, 1970 - 1977, 1994 - 2001, 2004 - 2015 வரை SLFP யும் அரசாங்கத்தை அமைத்து வந்துள்ளது. இக்காலப்பகுதிகளில் UNP யும் SLFP யும் ஏனைய சிறிய கட்சிகள், சிறுப்பான்மை கட்சிகள் என்பவற்றுடன் கூட்டமைத்துக் கொண்டு UNP - UNF எனவும், SLFP - PA, UPFA எனவும் கூட்டமைப்புகளாக ஆட்சியமைத்துள்ளன. எனவே இலங்கையின் அரசியல் கட்சி முறையை இரு கூட்டுக்கட்சி முறை அல்லது ஆதிபத்திய இரு கட்சிமுறை என அழைக்கின்றனர். எனினும் 2019ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் இலங்கை கட்சி முறையில் புதிய போக்கை ஆரம்பித்து வைத்துள்ளது.

## இலங்கை கட்சி முறையின் பிரதான பண்புகள்

❖ இரு கூட்டு கட்சி முறை

இலங்கையின் கட்சி முறை இரு கூட்டு கட்சி முறையாக காணப்படுகின்றது. UNP, SLFP ஆகிய இரு பிரதான கட்சிகளை மையமாகக் கொண்டு அமைந்திருப்பதனால் ஏனைய கட்சிகள் இவ்விரு பிரதான கட்சிகளினால் ஈர்க்கப்பட்டிருப்பதாலும் இலங்கையில் கூட்டு கட்சி முறை உருவாகி நடைமுறையில் உள்ளது. இதன் பொருள் சிறிய அரசியல் கட்சிகள் இரு பிரதான அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் கூட்டமைப்புக்குள் ஒழுங்கமைவது என்பதாகும். இதன் விளைவாக தற்காலத்தில் இலங்கையின் தேர்தல் போட்டிகள் பிரதான இரு கட்சிகளையும் சுற்றியமைந்திருத்தல் ஒரு பிரதான பண்பாக சுட்டிக்காட்டலாம்.

❖ கட்சிகளின் தோற்றம் அதிகரித்துச் செல்லல் அல்லது பல கட்சிகள் தோற்றம் பெறல்

இன்று இலங்கையில் இதுவரை (2019) 66க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இதன் எண்ணிக்கை மேலும் அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது. இவ்வாறு பல கட்சிகள் தோன்றி வளர்ச்சியடைந்து செல்வதற்கு பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. பல்லின சமூக முறை, பல்வேறு அரசியல் கருத்தியல்களின் செயற்பாடு, விகிதசம பிரதிநிதித்துவ முறை, மாகாண சபை முறை, மற்றும் இனவாத, பிரதேசவாத அம்சங்களும் பல கட்சிகள் உருவாக அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன.

❖ இனத்துவ அடையாளக் கட்சிகள்

இலங்கையில் தோற்றம் பெற்றுள்ள இனத்துவக் கட்சிகள் பிரதானமாக சிங்களம், தமிழ், முஸ்லீம் ஆகிய இனங்களை அடையாளப்படுத்துபவைகளாக உள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிங்கள உறுமய, பூமிபுத்திரகட்சி என்பவற்றை இனத்துவ அடையாளக் கட்சிக்கு சில உதாரணங்களாக குறிப்பிடலாம்.

❖ இடதுசாரி கட்சிகளின் வீழ்ச்சி

இலங்கை அரசியல் கட்சி முறைமையில் அண்மைக்காலத்தில் தென்படும் மற்றுமொறு முக்கிய பண்பாக இடதுசாரி கட்சிகளின் வீழ்ச்சியை குறிப்பிடலாம். சுதந்திரம் பெறுவதற்கு முன்னரிலிருந்து 1977ஆம் ஆண்டு வரை இலங்கை அரசியலில் பலம் பெற்றிருந்த இடதுசாரிகள் 1977ஆம் ஆண்டு பொது தேர்தலில் படுந்தோல்வியடைந்ததன் பின்னர் இடதுசாரி கட்சிகளால் சுயமாக செயற்பட முடியவில்லை. மாறாக அவை இரு பிரதான கட்சிகளுடன் ஏதேனும்

ஒன்றுடன் இணைந்து செயற்படவில்லையாயின் அவற்றுக்கு இருப்பு இல்லை என்ற அளவுக்கு மிக மோசமான நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளன.

❖ தேசிய மட்டத்திலான கட்சிகள் காணப்படாமை
இலங்கையில் பல அரசியல் கட்சிகள் செயற்பட்டாலும் நாடு முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசிய மட்டத்தில் அமைந்த கட்சிகளின் செயற்பாடு காணப்படுவதில்லை. இரு பிரதான கட்சிகளும் கூட வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிட்டு வெற்றிப்பெறாத நிலையிலும் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள சிறுபான்மை கட்சிகள் தென்னிலங்கையில் போட்டியிட்டு வெற்றிப்பெற முடியாத நிலையே காணப்படகின்றது.

❖ பிரமுகர்களின் முக்கியத்துவம்
இலங்கை கட்சி முறையில் காணப்படும் மற்றுமொரு பண்பு பெரும்பாலான கட்சிகள் சில பிரமுகர்களை மையமாகக் கொண்டு செயற்படுவதாகும். இப்பண்பினை இரு பிரதான கட்சிகளில் மட்டுமன்றி ஏனைய பல சிறிய கட்சிகளிலும் காணலாம்.

❖ கட்சி முறையும் தலைமைத்துவமும்
அரசியல் கட்சிகளின் பிரதான பணிகளில் ஒன்றாக எதிர்கால அரசியல் தலைவர்களை இனங்காணலும் பயிற்றுவித்தலையும் குறிப்பிடலாம். ஆரம்பகால இடதுசாரி மற்றும் தேசிய தலைவர்கள் பிற்காலத்தில் அரசியல் தலைமைத்துவத்தை ஏற்றனர். அவை அரசியல் தலைவர்களை பயிற்றுவித்த பள்ளிகளாக விளங்கின. ஆனால் தற்போது இநிநிலையை காணமுடியாதுள்ளது. படிப்படியாக முன்னேற்றமடைந்த தலைவர்களைத் தவிர அரசியல் தெளிவாக வெளிப்பட்ட தலைவர்கள் மிக சொற்பளவிலேயே காணப்படுகின்றனர்.

இலங்கையின் பல கட்சி முறைக்கு (இரு கூட்டு கட்சி முறைக்கு)
அடிப்படையாக அமைந்த காரணிகள்.

இலங்கையில் கட்சி முறையை அவதானிக்கின்ற போது இரு கட்சி முறையில் இருந்து இரு கூட்டு கட்சி முறைக்க மாறி இன்று பல கட்சி முறையை நோக்கி வளர்ச்சியடைந்த சென்று கொண்டிருப்பதனை அவதானிக்கலாம். இந்நிலை உருவாக பின்வரும் காரணிகள் அடிப்படைகளாக அமைந்திருப்பதனை எடுத்துக்காட்டலாம்.

(அ) சமூக பல்லினத் தன்மை
இலங்கை பல்லின சமூக தன்மையை கொண்டிருப்பதனால் அச்சமூக குழுக்கள் தமது தேவைகளை அடைய முடியாத போது தமக்கென தனியான அரசியல் கட்சிகளை உருவாக்குதல்.

(ஆ) சமப்படுத்த முடியாதவாறு வகுப்பு முரண்பாடுகள் நிலவுதல்
இதன் பொருள் சமூக முறையை சமப்படுத்த முடியாதவாறு செல்வந்த வர்க்கம், பாட்டாளி வர்க்கம், என இரு பகுதிகளாக பிளவுபட்டு இருக்கும்போது அவை தமது நலன்களுக்காக வெவ்வேறு முறையில் ஒழுங்கமைதல்.

(இ) கோட்பாட்டு ரீதியான முரண்பாடுகள்
கோட்பாட்டு ரீதியாக இடதுசாரி கட்சிகள், வலது சாரி கட்சிகள், தீவிர போக்குடைய கட்சிகள், இனவாத மற்றும் பிரதேசவாத கட்சிகள் என பிளவுபட்டிருத்தல்.

(ஈ) நடைமுறையிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறை
1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறை பல கட்சி முறை ஒழுங்கமைவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

(உ) கட்சிகளுக்கிடையிலான முரண்பாடும் பிளவுகளும்
அண்மைக் காலமாக அரசியல் கட்சிமுறைமையை அவதானிக்கின்ற போது பிரதான கட்சிகளிடையேயும் மட்டுமன்றி சிறிய கட்சிகளிடையேயும் பிளவுகள் ஏற்பட்டு பல கட்சி முறைக்கு வித்திடுகின்றமை.

## இலங்கை அரசியல் கட்சிகளின் அண்டைக்காலப் போக்குகள்

இலங்கை அரசியல் கட்சிகளின் தோற்றம் இடதுசாரி கட்சிகளின் தோற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இலங்கை சுதந்திரம் பெற முன்னரே அரசியல் கட்சிகளின் தோற்றத்தை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக 1930 களில் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற ஆரம்பித்தன. இவை பல கட்சிப்பண்பு, ஆதிக்க இருகட்சி முறை, பல சிறிய கட்சிகள் மற்றும் இனத்துவக் கட்சிகளைக் கொண்டுள்ளன. அரசியல் கட்சிகள் மற்றும் கட்சி முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களானவை சமூக அரசியல் காரணிகள், தேர்தல் முறைமை மாற்றங்கள் மற்றும் இயக்கத்தன்மையுள்ள ஜனநாயகத்துடன தேர்தல் முறைகள் செயற்பட்ட விதம் என்பவற்றினால் தூண்டப்பட்டவையாகும். இந்த வகையில் இலங்கை அரசியல் கட்சிகளின் அண்மைக்காலப் போக்குகளை பின்வருமாறு சுருக்கமாக அடையாளப்படுத்தலாம்.

- இரு பிரதான கட்சிகளான UNP மற்றும் SLFP இன் வீழ்ச்சி.
- SLPP மற்றும் SJB ஆகிய புதிய காட்சிகளின் தோற்றம்.இவை இரண்டும் UNP, SLFP ஆகிய கட்சிகளிலிருந்து பிரிந்து சென்று உருவான கட்சிகளாகும்.
- குட்சி தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் புதிய கட்சி தலைமைத்துவத்தின் தோற்றமும்.
- பழைய கட்சிகளுள் காணப்பட்ட உள்ளக முரண்பாடுகள் புதிய கட்சிகளின் தோற்றத்துக்கு வழிவகுத்தன.
- புதிய மற்றும் சிறிய கட்சிகள் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களில் தோற்றம் பெற்றன.
- பழைய மற்றும் புதிய இடதுசாரிக் கட்சிகள் தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கில் செல்லுதல்.
- அரசியல் கட்சிகள் பரந்துபட்டவையாக மாறியுள்ளதனால் அவை உறுதியற்ற ஒழுங்கமைப்பை கொண்டவையாக, அங்கத்துவமில்லாத, இறுக்கமான ஒழுக்க நடைமுறைகள் இல்லாதவையாக காணப்படுகின்றன.
- அரசியல் கட்சிகள் மரபு ரீதியாக கருத்தியல் அடையாலங்கள் பலவீனமடைந்துள்ளன.
- அரசியல் கட்சிகள் மீது மரபு ரீதியான ஆளுங்குடும்பத்தினர் கொண்டிருந்த கட்டுப்பாடு பலவீனமடைந்து வேறு வகுப்பு மற்றும் குடும்ப பின்புலத்தைச் சேர்ந்த புதிய தலைமுறைத் தலைவர்கள் அதனை சவாலுக்குட்படுத்தி உள்ளனர்.
- ஆரசியல் கட்சி முறையில் ஏற்பட்டுள்ள இத்தகைய மாற்றங்களுக்கு பங்களிப்புச் செய்த காரணிகளாக சமூக மாற்றம், தேர்தல் முறையில் ஏற்பட்ட மாற்றம், இனதுதுவ, மத அரசியல் இயக்கங்களின் தோற்றம் அரசியல் கட்சிகளின் மரபு ரீதியான தலைமைத்துவத்தை மாற்றுவதற்கு முன்வைக்கப்பட்ட ஜனநாயக ரீதியான அழுத்தங்கள், கட்சிகளி கருத்தியல்களின் முக்கியத்துவம் என்பவையாகும்.

இலங்கை தமக்கேயுரிய பண்புகளைக் கொண்ட நன்கு வளர்ச்சியடைந்த அரசியல் கட்சி முறையினைக் கொண்டுள்ளது. 1950களின் ஆரம்பத்தில் பல சிறிய கட்சிகளுக்கு மத்தியில் இரு கட்சி முறையொன்று ஆரம்பித்தது. பின்னர் படிப்படியாக இரு ஆதிக்க கட்சிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு பல கட்சி முறை உருவாகியது. அவை UNP மற்றும் SLFP சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இலங்கையின் அரசியல் கட்சி முறையில் இடதுசாரி கட்சிகளும் முக்கிய பங்காற்றியுள்ளன. எவ்வாறாயினும் ஒட்டுமொத்தத்தில் இலங்கையினுடைய அரசியல் கட்சிகளிலும் கட்சி முறையிலும் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை இலங்கை சமூகத்தில் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள், தேர்தல் செயன்முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் ஜனநாயகம் செயற்படுகின்ற விதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன வெளிப்படுத்தப்படுகின்றன.

குறிப்பு:-

இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள குறிப்புக்கள் வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள கவனத்தில் கொள்ளவும். இங்கு தரம் 13 பாடதிட்டத்திலுள்ள அலகுகளில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே

வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பாட அலகு தொடர்பாக மேலதிகமாக மேலும் தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்த கால அரசியல், விஞ்ஞான வினாவிடை புத்தகம்
- புள்ளியிடும் திட்டம் - இலங்கை பரீட்சைத் திணைக்களம், G. C. E. (A/L) அரசறிவியல்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, தரம் 3 – தேசிய கல்வி நிறுவகம்.
- அரசறிவியல்

மாதிரி வினாக்கள்

1. இலங்கை அரசியல் கட்சி முறைமையின் பிரதான பண்புகள்.
2. இடதுசாரி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.
3. இலங்கையில் பல கட்சி முறைக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்.
4. இலங்கையில் அரசியல் கட்சி முறைமையில் அண்மைக்கால போக்குகள்.
5. சிறுகுறிப்பு எழுதுக.
   (i) இடதுசாரி கட்சிகள்
   (ii) இரு பிரதான கட்சிகளிடையே பிளவு (UNP, SLFP)

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## பகுதி – **B**

1. சுதந்திரத்துக்கு முற்பட்ட இலங்கையில தோற்றம் பெற்ற இடதுசாரி கட்சிகள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
2. இடதுசாரி கட்சிகள் உருவாக அடிப்படையாக அமைந்த காரணிகள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
3. ஆரம்ப கால இடதுசாரி தலைவர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
4. இலங்கையில் 2019 வரை இரு பிரதான கட்சிகளை முதன்மைப்படுத்திய பல கட்சி முறை என கருதப்படுகின்றது. அவ்விரு பிரதான கட்சிகளும் எவை?
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
5. இலங்கையில் காணப்படும் இரண்டு சிறுபான்மைக் கட்சிகளை குறிப்பிடுக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
6. இலங்கையில் பல கட்சி முறைக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
7. இலங்கையில் தற்போதுள்ள (2021) ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
8. இலங்கையில் நடைமுறையில் காணப்படும் பிராந்திய கட்சிகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
9. இலங்கை கட்சி முறைமையில் அண்மைக்கால போக்குகள் இரண்டைத் தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
10. (i) UNP மற்றும் (ii) SLFP ஆரம்ப தலைவர்களின் பெயர்களை தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………

பத்திப் பாடசாலைக் கல்வித் திணைக்களம்

## அலகு - 14

# சர்வதேச அரசியல் - International Politics

சர்வதேச அரசியல் இன்று அரசறிவியல் பாடப்பரப்பில் ஆராயப்படும் முக்கிய கருப்பொருளாக மாறியுள்ளது. இக்கற்கைநெறியானது இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குறிப்பாக உலக மகாயுத்தத்தின் பின்னர் அரசியல் பாடப்பரப்போடு இணைந்துக்கொண்டது. முதலாம் உலக மகாயுத்தம் ஏற்படுத்திய உலகலாவிய தாக்கமும் அதன் பின்னணியில் உருவாகிய சர்வதேச சங்கம், "லீக் ஒப் நேஸன்" சர்வதேச தொடர்புகளிலும், போக்குவரத்திலும் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்கள் இந்த ஈடுபாட்டினை தீவிரப்படுத்தியது.

சர்வதேச அரசியல் என்பது தேசங்களுக்கு இடையிலான அரசியல் என சுருக்கமாக விளக்கமளிக்கலாம் எனும் இதன் விளக்கம் பரந்ததாகும். இந்த வகையில் சர்வதேச அரசியல் என்பது தேசங்கள், நாடுகள் என்பவற்றுக்கிடையில் அரசியல், இந்நாடுகளுக்கிடையிலான உறவுகள், முரண்பாடுகள், அரசுகள் ஒன்றிணைந்து செயற்படுத்தும் சர்வதேச அமைப்புக்கள், சட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கியதாகும் எனலாம்.

சர்வதேச அரசியல் என்பது பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பெயர்களைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக உலக விவகாரம், உலக அரசியல், சர்வதேச தொடர்புகள், சர்வதேச உறவுகள் என அழைக்கப்பட்டு வந்துள்ளது.

❖ **H. J.** மொகன்தோ - **H. J. Mogentha**
சர்வதேச அரசியல் என்பது தேசங்களுக்கு இடையில் இடம்பெறும் அதிகாரத்துக்கான போராட்டமும் அதிகார பிரயோகமுமே ஆகும்.

❖ கார்ட் மென் - **Caredmen**
சர்வதேச அரசியல் என்பது அரசுகள் தமது தேசிய நலன்களுக்கேற்ப இசைவாக்கம் செய்யும் செயன்முறை பற்றிய கற்கையேயாகும்.

❖ ஸ்புரேட் - **Sprout**
சர்வதேச அரசியல் என்பது நடைமுறையில் தேசங்களின் நலன்களில் மோதல்கள், எதிர்ப்பை தாங்கும் சக்தி ஆகிய பண்புகளைக் கொண்ட சுதந்திரமான சமூகங்களின் தொடர்புகள் ஆகும்.

❖ பிளிக்ஸ் குரோஸ் - **Feliks Cross**
சர்வதேச அரசியல் எனபது பிராந்தியத்தின் பிரச்சினைகளுக்கான தீர்வினைத் தேடுதல், எதிர்காலத் திட்டங்கள், கொள்கைகள், பெறுமதிகள், சித்தாந்தங்கள் என்பவற்றிளுள்ள தகுந்த பதமாகும்.

மேற்படி அறிஞர்களின் கருத்துக்களின்படி சர்வதேச அரசியல் என்பது அரசுகளுக்கிடையிலான உறவுகள், அரசாங்கங்களுக்கிடையிலான உறவுகள் என சுருக்கமாக விளங்கிக்கொள்ளலாம். சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரம், சர்வதேச அரசியல் முறைமை, சர்வதேச நிறுவனங்கள், யுத்தம் மற்றும் சமாதானம், தேசிய நலன். தேசியவாதம், இராஜதந்திரம் என்பன முக்கியமாக ஆராயப்படும் எண்ணக் கருக்கலாகும். சர்வதேச அரசியலை கற்பதற்கான அணுகுமுறைகளாக முறைமைக் கோட்பாடு, தீர்மானம் இயற்றல் கோட்பாடு ஆட்டக் கோட்பாடு செய்தித் தொடர்பு கோட்பாடு என்பன காணப்படுகின்றன.

## சர்வதேச அரசியலின் இயல்புகள்

அரசறிவியலில் சர்வதேச அரசியல் என்ற பகுதி முக்கிய கற்கை நெறியாக விளங்குகின்றது. இரண்டாம் உலகப்போரின் பின்னரே சர்வதேச அரசியல் அரசறிவியல் பாடப்பரப்போடு இணைந்துள்ளது. இதன் முன்னோடி H. J. மோகன்தோ ஆவார். இவரின் கருத்துப்படி சர்வதேச அரசியலில் அரசுகளுக்கு மத்தியிலான அதிகாரப் போராட்டமே கற்கப்படுகின்றது. இப்பரந்த பொருளுள்ள விளக்கத்தில் சர்வதேச அரசறிவியலின் இயல்பு மீது பிரதான பரப்புகளைக் சுற்றியமைந்துள்ளது. அவற்றை பின்வருமாறு குறிப்பிடலாம்.

(அ) சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளரான இறைமைமிக்க சுதந்திர தேசிய அரசுகள் சர்வதேச அரசியலில் செயற்படும் விதத்தைக் கற்றல்.
இறைமையுடைய சுதந்திர தேசிய அரசுகள் சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரத்தை மையமாகக் கொண்டே செயற்படுகின்றன. அச்செயற்பாடு போராட்டத் தன்மை வாய்ந்ததாகும். இதன் பொருள் அரசுகள் அதிகாரத்தைப் பெறுதல், அதிகாரத்தைப் பரவலாக்குதல், அதிகாரத்தை உறுதிப்படுத்துதல் ஆகிய 3 நோக்கங்களை இலக்காகக் கொண்டு தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபடுகின்றன என்பதாகும். எனவே அதிகாரத்துக்கான போராட்டத்துடனான இயல்பினை கற்பதே சர்வதேச அரசியலின் இயல்பாகும்.

(ஆ) இறைமைமிக்க சுதந்திர அரசுகள் சர்வதேச அரசியலில் செயற்படும் விதத்தினை கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கற்றல்.

- ❖ சர்வதேச அரசியலின் அதிகாரத்தை இலக்காகக் கொண்டு அரசுகளுக்கு மத்தியில் நிலவும் தொடர்ச்சியான போராட்டம் உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. அவ் அச்சுறுத்தலை குறைக்க வேண்டுமாயின் அரசுகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும். அதனை இனங்காணுதல் அதன் முக்கிய இயல்பாகும்.
- ❖ இறைமையுடைய சுதந்திர அரசுகளின் அதிகாரத்துக்கான போராட்டத்தின் இயல்புகளைக் கற்பதே சர்வதேச அரசியலின் இயல்பாகும்.
- ❖ இறைமையுடைன சுதந்திர அரசுடன் சர்வதேச அரசியலில் செயற்படும் விதத்தினை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கற்பதேஅதன் மற்றுமொறு பண்பாகும்.
- ❖ அதிகாரத்தினை பெறுவதனையும் அதனை பாதுகாப்பதனையும், பிரயோகிப்பதனையும் நோக்கமாக கொண்ட ஒரு செயற்பாடாகும்.
- ❖ ஏமாற்று, நம்பிக்கைத்துரோகம், கபடம், நாசகாரம் போன்ற அம்சங்கள் சர்வதேச அரசியலின் முக்கிய இயல்பாகும்.
- ❖ சர்வதேச அரசியலில் தமது நலன்களை அடைவதற்கான இறுதி ஆயுதமாக போரை அல்லது யுத்தத்தை பயன்படுத்தல் அதன் மற்றுமொறு பண்பாகும்.
- ❖ சர்வதேச அரசியலில் போரும் சமாதானமும் மிக்கதொரு கற்கையாக அமைகின்றது.
- ❖ சர்வதேச அரசியலில் இறைமைமிக்க சுதந்திர அரசுகள் சர்வதேச சட்டங்களால் ஆளப்படுதல் மற்றுமொறு பண்பாகும்.

### தேசிய அரசியலுக்கும் சர்வதேச அரசியலுக்கும் இடையிலான வேறுபாடுகள்

- ❖ தேசிய அரசியல் என்பது ஓர் அரசுக்குள்ளேயான அரசியல் செயற்பாட்டை குறிக்கின்றது. சர்வதேச அரசியல் என்பது இறைமையுடைய பல அரசுகளுக்கிடையிலான அரசியலாகும்.
- ❖ தேசிய அரசியலானது தமக்கென ஒரு அரசாங்கத்தையுடைய அரசை குறிக்கும். சர்வதேச அரசியலானது அத்தகையதோர் அரசாங்கத்தை கொண்டிராத அரசாங்கமற்ற அரசியலாகும்.
- ❖ தேசிய அரசியலில் பிரதான செயற்பாட்டாளராக அரசியல் கட்சி விளங்கும். சுர்வதேச அரசியலில் பிரதான செயற்பாட்டாளர்கள் இறைமையுடைய அரசுகளாகும்.
- ❖ தேசிய அரசியல் என்பது ஓர் அரசின் எல்லைக்குள் நடைபெறும் அரசியல் செயற்பாடாகும். சர்வதேச அரசியல் என்பது எல்லை கடந்த அரசுகளுக்கிடையில் நடைபெறும் அரசியல் மோதல் செயற்பாடாகும்.
- ❖ தேசிய அரசியல் தேசிய அரசின் தோற்றத்துடன் ஆரம்பமானது. சர்வதேச அரசியல் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அரசறிவியலில் உள்வாங்கப்பட்டது.
- ❖ தேசிய அரசியலில் அரசாங்கம் முக்கிய வகிபாகத்தை மேற்கொள்கின்றது. சர்வதேச அரசியலில் பொது உடன்பாடுகள், சட்டம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த நிறுவனங்கள் பங்காற்றுகின்றது.
- ❖ தேசிய அரசியலில் சட்டம், ஒழுங்கு, பொதுமக்களின் பொது நலன் என்பவற்றின் மீது அக்கறை கொள்ளப்படுகின்றது. சர்வதேச அரசியலில் ஏமாற்று, கபடம், நாசகாரம் மற்றும் நம்பிக்கைத் துரோகம் என்பன கலந்து காணப்படும்.

❖ அரசியல் யாப்பின் அடிப்படையில் தேசிய அரசியலில் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. பலவீனமான சட்டம், சர்வதேச ஒப்பந்தங்களின் அடிப்படையில் சர்வதேச அரசியல் இடம்பெறுகின்றது.

சர்வதேச அரசியலில் அரச மற்றும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள்

சர்வதேச அரசியலின் ஒழுங்கினை தீர்மானிப்பதில் அதன் செயற்பாட்டாளர்களின் நடத்தைகள் தீர்மானமிக்கதாக உள்ளது. இந்த வகையில் சர்வதேச அரசியலில் இரு பிரதான வகையான செயற்பாட்டாளர்கள் உள்ளனர்.

1. தேசிய அரசுகள்
2. அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள்

1. தேசிய அரசுகள்:-
சர்வதேச அரசியலை தீர்மானிக்கும் பிரதான செயற்பாட்டாளர் தேசிய அரசுகளாகும். ஐரோப்பிய நாடுகளிடையே 1618இல் ஆரம்பமாகிய யுத்தம் சுமார் 30 ஆண்டுகளின் பின்னர் 1648இல் வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஐரோப்பாவின் பிரதான அரசுகளுக்கிடையே ஆள்புல எல்லைகளை தீர்மானிப்பதும், தேசங்களுக்கிடையிலான இறைமை தொடர்பான அடிப்படைக் கருத்துக்களை பொது அங்கீகாரத்திற்கு உட்படுத்தல் போன்ற காரணிகளால் சர்வதேச அரசியலினுள் இவ்வுடன்படிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது. இக்கருத்து நவீன இறைமைமிகு சுயாதின தேசிய அரசுகளின் ஒழுங்கமைப்பிற்கான மூலாதாரத்தைப் போசித்துள்ளது. பின்னர் இப்பொது ஏற்புடைமை சர்வமயமாகியதோடு தேசிய அரசுகள் இன்றுவரை சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளராக விளங்குகின்றது.

2. சர்வதேச அரச நிறுவனங்கள்:-
சர்வதேச சமூகம் தமது தொடர்புகளை இலகுப்படுத்திக் கொள்ளவும், முறைப்படுத்தவும், பொது நலனை ஏற்படுத்திக் கொள்வதற்கும் பல்வேறு துறைகளுக்கிடையே உருவாக்கப்பட்டுள்ள நிறுவனத் தொகுதிகள் சர்வதேச அரச சார் நிறுவனங்கள் (Inter Governmental Organizations) என அழைக்கப்படுகின்றன.
Eg:- ஐக்கிய நாடுகள் தாபனத்தை (UNO) குறிப்பிடலாம்.

இவ்வாறே சர்வதேச அரச சார்பு பிராந்திய அமைப்புகள் Eg:- சார்க், ஏசியான், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பாதுகாப்பு அதிகார நிறுவனங்கள் Eg:- அத்திலாந்திக் உடன்படிக்கை அமைப்பு (NATO) மேலும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பன சர்வதேச அரச சார்பு நிறுவனங்களாகும். இவ் அமைப்புக்களும் சர்வதேச அரசியலில் முக்கிய செயற்பாட்டாளர்களாக விளங்குகின்றன.

3. சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO)
**International Non Governmental Organization**
தேசிய அரசுகளின் உத்தியோகப்பூர்வ அரசியல் பிரதிநிதித்துவம் பிரதான அங்கத்துவ இயல்பொன்றாக காணப்படாத சர்வதேச அமைப்புகளின் வலையமைப்புகளை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) என அழைக்கப்படுகின்றன. விஷேடமானதொரு நோக்கம், பல நோக்கங்கள் அல்லது குறித்த விடயம் ஒன்றினை மையப்படுத்தி உருவாக்கியிருப்பதே இந்நிறுவனங்களின் பிரதான இயல்பாகும். 20ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மிகவும் விரைவாக பரவலடைந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை சுமார் 5000 இனை தாண்டியுள்ளன. இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடக்கம் விலங்குகளின் உரிமைகளைப் பாதுகாப்பது வரை பரந்து காணப்படுகின்றது. Eg:- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், வேல்ட் விஷன், இவை போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச அரசியல் செயற்பாட்டாளர்களாக விளங்குகின்றன.

4. பல்தேசிய கம்பனிகள்:-
சர்வதேச அரசியலை நிர்ணயிக்கும் செயற்பாட்டாளர்களாக பல்தேசியக் கம்பனிகளிலும் அமைந்துள்ளன. பல்தேசிய கம்பனிகள் என்பது தேசிய அரசுகளின் எல்லைகளைக் கடந்து உருவாக்கப்பட்டுளளள சர்வதேச தரத்திலான வியாபார நிறுவனங்களைக் குறிக்கின்றது. சமகால அரசுகளை விட அதிக நிதிப்பலமும் வளங்களையும், மூலதனத்தையும் உடைய நிறுவனங்களாக விளங்குகின்றது. மேலும் தேசிய அரசுகளின் எல்லைகளைக் கடந்து சர்வதேச அரசு மற்றும் கொள்கை கட்டமைப்புகளில் தாக்கம் செலுத்தும் வல்லமையுடையவையுமாகும்.
Eg: மைக்ரோ சொப்ட், கொகாகோலா, Apple, கூகுள்.

கீர்த்திமிகு தனிநபர்கள்:-
சர்வதேச அரசியலின் செயற்பாட்டாளர்களின் தேசிய அரசு மற்றும் சர்வதேச அமைப்புகளைத் தவிர மிக முக்கியமான மற்றும்மொரு செயற்பாட்டாளராக சர்வதேச ரீதியில் பிரபல்யமான நபர்கள் விளங்குகின்றனர்.
Eg: பரிசுத்த பாபரசர், தலாய்லாம, UNO செயலாளர்.

5. பயங்கரவாதக் குழுக்கள்:-
சர்வதேச அரசியலில் சம காலத்தில் காணக்கூடிய பிரதான பிரச்சினையாக பயங்கரவாததைதக் குறிப்பிடலாம். அரசுகளின் எல்லைகளைக் கடந்து சென்று அனைத்து பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் தொகுதிகளுக்கும் சவால் விடுக்கும் பயங்கரவாத அமைப்புகளின் வலையமைப்புகள் சர்வதேச அரசியலில் தாக்கத்தை செலுத்துகின்றது. இந்த வகையில் சர்வதேச அரசியலின் ஒழுங்கை தீர்மானிப்பதில் பயங்கரவாத குழுக்களும் செல்வாக்கு செலுத்துகின்றது.

மேற்குறிப்பிட்ட பிரதான செயற்பாட்டாளர்களுக்கு அப்பால் சர்வதேச அரசியலின் இயல்பினைத் தீர்மானிப்பதில் சூழல்சார் அழுத்தங்களாக புவி வெப்பமடைதல், நீர் பற்றாக்குறை, இயற்கை அனர்த்தங்கள், சுகாதாரப் பிரச்சினைகள் (கொரோனா கொவிட் 19) போன்றவைகளும் தீர்மானமிக்கதோர் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு சர்வதேச அரசியலில் அரசியல் செயற்பாடுகளது வகிபங்கு பிரதான இடத்தை பெறுகின்றது.

சர்வதேச அரசியல் செயற்பாட்டாளர்களின் வகிபங்கு
சர்வதேச அரசியலில் அரசுகள் தமது நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்படுகின்றது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்தல், பொது நலனை மேம்படுத்தல் அவற்றில் முககியமானவைகளாகும். சர்வதேச நிறுவனங்கள், பல்தேசிய கம்பனிகள், முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள். இவற்றில் அரசுகள் அடிப்பணிகின்றனவா இல்லையா என்பதனைப் பொருத்தே இதன் செயற்பாடுகள் நிர்ணயமாகின்றன.

சர்வதேச அரசியலில் அரசுகளின் தேசிய நலன்களும் தேசிய அதிகாரமும்

சர்வதேச சமூகத்தில் அரசுகளுக்கிடையில் இடம்பெறும் அரசியல் போராட்டமே சர்வதேச அரசியலாகும். அரசுகள் சர்வதேச அரசியலில் தமது தேசிய நலன்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கிலேயே ஈடுபடுகின்றன. சர்வதேச அரசியலில் அரசுகளின் செயற்பாடானது முழுமையாக தேசிய அரசியல் சமூகத்தில் இடம்பெறும் மனிதர்களின் பௌதீக சமூக செயற்பாடுகளை ஒத்தனவாகும். மனிதர்களின் சமூக, பௌதிக செயற்பாடுகளின் பிரதான நோக்கங்கள் செல்வத்தினை பெறுதல், அதிகாரத்தினைப் பெறுதல், பாலியல் வாழ்க்கையில் ஈடுபடுதல் என்பதாயின் அதேபோல் சர்வதேச அரசியலிலும் அவர்களின் நோக்கங்களாக இயன்றளவு செல்வத்தை சேகரித்தல், அதிகாரத்தை விருத்திச்செய்தல், நாட்டு எல்லைகளைப் பரவலாக்குதல் என்பனவாகும். இப் பிரதான மூன்று நோக்கங்களோடு தொடர்பான மேலும் பல நலன்களும் இடம்பெறுகின்றன. அவையே சர்வதேச அரசியலில் அரசுகளின் தேசிய நலன்கள் என கருதப்படுகின்றன. அவற்றை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

1. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்:-
இதன் பொருள் அரசியல் சுதந்திரம், ஆள்புல ஒருமைப்பாடு, நாட்டின் பௌதீக இருப்பு என்பவற்றை பாதுகாப்பதாகும். எனவே சர்வதேச அரசியலில் தேசிய நலன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த வகையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் பிரதான செயற்பாடாக அமைகின்றது.

2. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தல்:-
ஒரு நாட்டின் பொருளாதாரம் சிறந்து விளங்குவது மிகவும் முக்கியமானதாகும். அப்போதுதான் நாட்டின் ஏனைய விடயங்களையும் சிறப்பாக மேற்கொள்ள முடியும். எனவே தேசிய நலன் சர்வதேச அரசியலில் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

3. தேசிய பொது நலனை மேம்படுத்தல்:-
ஒரு அரசில் வாழும் மக்கள் சிறந்த பொருளாதார வளத்துடனும் சிறந்த வகையில் பௌதீக மற்றும் பொதுத் தேவைகளையும் பெற்று பொதுநலன்களை மேம்படுத்தும் வகையில் சர்வதேச அரசில் இடம்பெறும்.

4. தேசிய கருத்தியலைப் பாதுகாத்தல்:-
இதன் பொருள் அரசியல், சமூக, பொருளாதார அபிவிருத்தியை அடைவதனை நோக்கமாகக் கொண்டு அரசு நம்பிக்கை வைத்து பின்பற்றுகின்ற அரசியல் பொருளாதார கருத்தியலாகும். சர்வதேச அரசியலில் தேசிய கருத்தியலைப் பாதுகாத்தல் இடம்பெறுகின்றது.

5. நாட்டின் தேசிய அபிமானத்தைப் பாதுகாத்தல்:-
ஒரு நாட்டைப் பொறுத்த வரையில் தேசிய அபிமானம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நலனாகும். ஏனெனில் ஒரு நாட்டில் தேசிய அபிமானம் பாதிக்கப்படும் போது அந்நாடு சர்வதேச சமூகத்தால் ஓரங்கட்டப்படும் நிலை உருவாகலாம். எனவே சர்வதேச அரசியலில் இதுவும் பிரதான தேசிய நலனாக கருதப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான திறன் நாட்டின் தேசிய அதிகாரத்தின் அளவிலேயே தங்கியுள்ளது. எனவே சகல அரசினதும் பிரதான நோக்கம் நாட்டின் தேசிய அதிகாரத்தினை இயன்றளவு விருத்தி செய்து கொள்வதாகும்.

## தேசிய அதிகாரம்

சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரம் என்பது ஒவ்வொரு அரசிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த வகையில் சர்வதேச அரசியலானது அதிகாரத்துடன் தொடர்புபட்ட தேசிய அதிகாரத்தின் பகுதிகள், அதிகார சமநிலை, அதிகாரச் சமன்பாடு போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

அதிகாரம் என்பது மக்களின் வாழ்வில் சகல அம்சங்களிலும் தொடர்புபட்டு காணப்படுகின்றனது. இது அதிகாரத்தைப் பெறுதல், அதிகாரத்தை விரிவுபடுத்தல், அதிகாரத்தைப் பேணுதல் என்ற காரணிகளாக காணப்படலாம். சமூக, பொருளாதார, இராணுவ, தொழில்நுட்ப, உளவியல் அடிப்படையிலான அதிகாரத்தினை பெற்றுக்கொள்ள முயல்கின்றனர். இதனையே தேசிய அதிகாரம் என்கின்றோம்.

“தேசிய அதிகாரம் என்பது ஒரு அரசு இன்னொரு அரசினுடைய செயற்பாட்டிலும் நடத்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இயலுமையாகும்” என H. J. மொகன்தோ (H. J. Mogentho) குறிப்பிடுகின்றார்.

“தேசிய அதிகாரம் என்பது கட்புலனாகும் அல்லது கட்புலனாகா வளங்களையும் பயன்படுத்தி சர்வதேச அரசு முறையினுள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சர்வதேச ஏற்பாட்டாளருடைய இயலுமையாகும்” என ரோசன், ஜெனிஸ் ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

தேசிய அதிகாரம் ஒரு அரசின் செயற்பாட்டுக்கான பிரதான அடிப்படையாக விளங்குகின்றது. தேசிய நலனை அடைந்து கொள்வதற்கான முக்கிய கருவியாக காணப்படுகின்றது.

குறிப்பு:-

இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள குறிப்புக்கள் வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள கவனத்தில் கொள்ளவும். இங்கு தரம் 13 பாடதிட்டத்திலுள்ள அலகுகளில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பாட அலகு தொடர்பாக மேலதிகமாக மேலும் தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்த கால அரசியல், விஞ்ஞான வினாவிடை புத்தகம்
- புள்ளியிடும் திட்டம் - இலங்கை பரீட்சைத் திணைக்களம், G. C. E. (A/L) அரசறிவியல்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, தரம் 3 – தேசிய கல்வி நிறுவகம்.
- அரசறிவியல்

மாதிரி வினாக்கள்

1. சர்வதேச அரசியலின் இயல்பு
2. சர்வதேச அரசியலில் அரசுகளின் தேசிய நலன்கள்
3. சர்வதேச அரசியலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கு.
4. தேசிய அரசியலுக்கும் சர்வதேச அரசியலுக்குமான வேறுபாடுகள்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## பகுதி – **B**

1. சர்வதேச அரசியல் தொடர்பான கருத்துக்களை முன்வைத்த அறிஞர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
2. சர்வதேச அரசியலின் இயல்புகள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
3. தேசிய மற்றும் சர்வதேச அரசியலுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
4. சர்வதேச அரசியலில் அரச சார்பான செயற்பாட்டாளர் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
5. சர்வதேச அரசியலில் அரச சார்பற்ற செயற்பாட்டாளர் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
6. சர்வதேச அரசியலில் தேசிய நலன்கள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
7. சமகால சர்வதேச அரசியலில் பிரதான போக்குகள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
8. சர்வதேச போக்குகள் இலங்கை மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் இரண்டு தருக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
9. சர்வதேச அரசியலில் இலங்கை மீது மிக நெருக்கமான செல்வாக்கையுடைய இரண்டு பிராந்திய நாடுகளை பெயரிடுக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………
10. சர்வதேச அரசியலின் இலங்கை மீதான சாதக மற்றும் பாதக விளைவுகளை குறிப்பிடுக.
   (i) ……………………………………………………………………………………
   (ii) ……………………………………………………………………………………

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# அலகு - 15

## இலங்கையும் உலகமும்

வெளிநாட்டுக் கொள்கை **- Foreign Policy**

வெளிநாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு ஏனைய நாடுகளுடன் எத்தகைய உறவுகளைக் கொண்டிருக்க வேண்டும். அல்லது எத்தகைய வழிமுறைகளின் ஊடாக தமது தொடர்புகளை பலப்படுத்தி கொள்ள வேண்டும் என்பது பற்றியதாகும். அரசுகள் தமது தேசிய நலன்களை வெளிவாரியாக வெளிநாட்டுக் கொள்கையின் மூலமே வெளிப்படுத்துகின்றது. அரசாங்கத்தின் பணிகளுள் மிக முக்கியமான ஒரு பணி நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை வகுப்பதாகும். சர்வதேச அரசியலில் அரசுகள் தமது தேசிய அதிகாரத்தை விருத்தி செய்துகொள்வதோடு நாட்டின் கௌரவம், பிரதிமை மற்றும் கீர்த்தி நாமம் என்பவற்றை விருத்தி செய்து கொள்வதற்கு வெளிநாட்டுக் கொள்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வெளிநாட்டுக் கொள்கை என்பது சர்வதேச அரசியற் செயற்பாட்டுக்கானதொரு பொறிமுறையாகும். வெளிநாட்டுக் கொள்கையானது தேசிய கொள்கையிலிருந்து வேறுபட்டதொன்றல்ல. அது தேசிய கொள்கையின் ஒரு பகுதியாகும். எனவேதான் தேசிய நலனை மையமாகக் கொண்டமைந்துள்ளது. வெளிநாட்டு கொள்கையானது ஒரு நாட்டின் வெளிவாரியான சூழ்நிலைகள் மற்றும் உள்நாட்டு நிலைமைகளை கருத்திற்கொண்டு உருவாக்காப்பட்டிருக்கும்.

1. கியு ஜிப்சன்
   வெளிநாட்டுக் கொள்கை என்பது “ஒரு அரசாங்கத்தின் தொடர்புகளை உலகின் மற்றைப் பகுதிகளோடு அறிவு, அனுபவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறந்த வடிவில் அமையும் விரிவான திட்டமாகும்.

2. லின் கொலன்
   ஒரு அரசு பரந்தளவில் திட்டமிட்ட நோக்கங்களையும், நலன்களையும் பாதுகாத்துக்கொள்ள திட்டமான செயற்பாடுகளாக மாற்றும் பிரதான கொள்கையாகும்.
3. ஜோர்ஜ் மொடல்ஸ்கி
   மற்றைய அரசுகளின் நடத்தையினை மாற்றும் சர்வதேச சூழ்நிலைக்கு உகந்தவாறு தமது சொந்த நடவடிக்கைகளை மாற்றுவதற்கு சமுதாயங்களால் உருவாக்கப்படும் நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு முறையே வெளிநாட்டுக் கொள்கையாகும்.

4. நோர்மன் ஹில்
   ஒரு நாடு தன்னுடைய வளமும், நலமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு பிற நாடுகளின் நலமும் அவ்வாறே பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதற்காக உருவாக்கிக்கொள்ளும் கொள்கையே வெளிநாட்டுக் கொள்கை எனப்படும்.

இதன்படி வெளிநாட்டு கொள்கை என்பது மற்றைய அரசுகளை நோக்கிய ஒரு அரசின் நடத்தையைப் பற்றியே வெளிநாட்டுக்கொள்கை கவனம் கொள்கிறது. அரசியல், பொருளாதார, கலாசார துறைகளில் ஒவ்வொரு அரசும் மற்றைய அரசுகளுடன் தொடர்புகளைக் கொள்கின்றன. அவை சினேகித பூர்வமானவையாகவும், எதிர்புணர்வை அடிப்படையாகக் கொண்டவையாகவும் அமையலாம். சுருக்கமாக கூறுவதாயின் ஒரு அரசின் வளங்களை, பொருளாதாரம், இராஜதந்திரம், பிரச்சாரம் என்பவற்றை பயன்படுத்தி தேசிய நலனை முன்னேற்றுவதற்கு மற்றைய அரசுகளின் நடத்தையினைத் தூண்டுவதே வெளிநாட்டுக் கொள்கையின் உள்ளடக்கமாகும்.

### இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்தும்/தீர்மானிக்கும் காரணிகள்

ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது வெளிவாரியான மற்றும் உள்வாரியான காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. சர்வதேச சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமகால உலகிலுள்ள நாடுகளின் வெளியுறவுக்கொள்கையின் வடிவத்தை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இது இலங்கைக்கும் பொருத்தமானதாகும். இலங்கையின் வெளியுறவுக் கொள்கை சமகால பிராந்திய மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்படும். அந்தந்த நாடுகளின் சமூக, அரசியல், பொருளாதார வரலாற்று மற்றும் புவியியல்சார் அரசியல் முக்கியத்துவம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த வகையில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்பினை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தும் சாதனங்கள் பல உள்ளன. அவற்றை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

1. புவிசார் அரசியல் அமைவிடம் சார் காரணிகள்
2. சமூக மற்றும் கலாசார காரணிகள்
3. அரசியல், பொருளாதார காரணிகள்
4. ஆட்சியாளர்களின் அரசியல் அபிலாசைகள்
5. பொதுமக்களின் எதிர்பார்ப்புகளும், பொதுசன அபிப்பிராயமும்
6. பிராந்திய மற்றும் சர்வதேச அதிகாரச் சமநிலை

1. புவிசார் அரசியல் அமைவிடம்
இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை வடிவமைப்பதில் இலங்கையில் புவியியல் அமைவிடம் பிரதான பங்கை வகிக்கின்றது. இலங்கை இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள ஓர் தீவாகும். புராதன காலம் தொட்டு இன்று வரை இலங்கை பல்வேறு நாடுகளுடன் தொடர்புகளை கொண்டிருப்பதற்கு இந்து சமுத்திரத்தின் மையமாகவும், கடல்வழிப்பாதையில் அமைந்திருப்பதும் ஒரு காரணமாகும். இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பது இந்தியாவுடன் நீண்ட காலமாக பல்வேறு தொடர்புகளைக் கொண்டமைவதற்கு வழிவகுத்துள்ளது.

2. சமூக மற்றும் கலாசார காரணிகள்
இலங்கை பல்லின சமய, கலாசாரத்தையுடைய நாடாகும். இந்த வகையில் இலங்கையின் வெளிநாட்டு கொள்கையை தீர்மானிக்கும் பிரதான காரணிகளில் ஒன்றாக சமூக மற்றும் கலாசார காரணிகள் அமைந்துள்ளது. இந்தியாவுடனான மிக நீண்டகால தொடர்புகளுக்கு இக்காரணி அமைவாக விளங்குகின்றது. இந்தியா மட்டுமல்லாது மத்தியகிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான உறவில் இதன் பங்கு முக்கியமானதாகவுள்ளது. வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிப்பதில் மட்டுமல்லாது உள்ளக அரசியலை தீர்மானிப்பதிலும் பிரதான சாதனமாக காணப்படுகின்றது.

3. அரசியல் பொருளாதார காரணிகள்
இலங்கையின் அரசியல் பொருளாதார நிலவரமும் ஆட்சியாளர்களின் அரசியல் பொருளாதார கொள்கைகளும் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்துகின்றது. இலங்கை அபிவிருத்தியடைந்துவரும் நாடாகும். பொருளாதார பிரச்சினைகளுக்கு வெளிநாட்டு உதவிகள் மிக அவசியமானதாகும். இந்த வகையில் தங்கியிருக்க வேண்டிய கட்டாயம் நிலவுகின்றது. எனவே இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகள் மற்றும் சார்க் அமைப்பு, ஆசியான் அமைப்பு மட்டுமல்லாது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க உறவுகளையும் பேண வேண்டியதாக உள்ளது.

4. ஆட்சியாளர்களின் அரசியல் அபிலாசைகள்
ஆட்சியாளர்கள் குறிப்பாக J. R. ஜயவர்தன, சந்திரிக்கா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்க, கோதாபய ராஜபக்ஷ ஆகியோர்களது அரசியல் பொருளாதார அபிலாசைகள் என்பனவும் இலங்கை வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்தியுள்ளதைக் குறிப்பிடலாம்.

5. பொதுசன அபிப்பிராயமும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளும்
பொதுசன அபிப்பிராயம் மற்றும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்பினை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றது. பொதுமக்களின் எதிர்பார்ப்பு, பொதுசன அபிப்பிராயம் இலங்கை “மேற்குலகசார் தங்குநிலை”, “சீனசார்பு நிலை”, “இந்திய சார்பு நிலை” என்ற வகையில் சமூகத்தினுள் உருவாக்கப்பட்டுள்ள கருத்தாடல்கள் தொடர்பில் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துவதை காணக்கூடியதாக உள்ளது.

6. பிராந்திய மற்றும் சர்வதேச அதிகார சமநிலை
பிராந்திய மற்றும் சர்வதேச வலுச் சமநிலையும் வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிக்கும் சாதனமாகும். தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியாவை முதன்மையாகக் கொண்ட வலுச்சமநிலையும் சர்வதேச சமூகத்தில் ஒரு துருவ, இருதுருவ, மற்றும் பல்துருவ போன்ற வலுச்சமநிலை எந்தவொரு அரசினதும் வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றது.

இலங்கை வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படை (விே'ட) பண்புகள்

அரசுகள் தமது தேசிய நலன்களை வெளிவாரியாக வெளிநாட்டுக் கொள்கையின் மூலமே வெளிப்படுத்துகின்றன. அரசாங்கத்தின் பணிகளுள் மிகவும் முக்கியமானதொரு பணி நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை வகுப்பதாகும். இந்த வகையில் இலங்கை வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படை பண்புகளாக பின்வரும் அம்சங்களை குறிப்பிடலாம்.

(i) சர்வதேச சமூகத்தில் நாட்டின் தேசிய கௌரவத்தை கட்டியெழுப்புவதற்காக செயற்படுதல்
அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் சகல அரசுகளோடும், சர்வதேச நிறுவனங்களோடும் நட்புமுறையில் ராஜதந்திர உறவுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதை காணலாம். இதன் மூலம் நாட்டின் கீர்த்தி நாமத்தினை கட்டியெழுப்ப பலத்த முயற்சிகளை மேற்கொள்கின்றது. இதன்படி மேற்கத்தேய அரசுகளுடனும் கீழைத்தேய அரசுகளுடனும் இராஜதந்திர உறவுகளை பேணி வருகின்றது.

(ii) நாடு எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார பிரச்சினைகளிலிருந்து நாட்டை மீட்டெடுத்தல்
அரசாங்கம் பொருளாதார நோக்கை இலக்காக கொண்டு பொருளாதார இராஜதந்திர உறவுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றது. இந்நோக்கத்தை அடைவதற்காக பொருளாதார காரணிகளை உபாய ரீதியாக பயன்படுத்துகின்றது.

அரசாங்கம் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள், ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடனும் சமமான இராஜதந்திர உறவுகளை பேணும் வகையில் செயற்படுகின்றது.

(iii) கடந்த கால போரின் இறுதி காலப்பகுதியில் நிகழ்ந்தனவெனக் கோரப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தின் இறுதிகாலப் பகுதியில் நிகழ்ந்தவையெனக் கோரப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றிய சர்வதேச சமூகத்திலிருந்து ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையிலிருந்தும் எழுப்பப்படும் பாரிய போர்க்குற்றங்கள்பற்றிய குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபடுவதற்கான நடவடிக்கைகளை குறிப்பிடலாம். அதன்படி அரசியல் சுதந்திரம், மக்கள் இறைமை, தேசிய ஒருமைப்பாடு என்பவற்றுக்கு பாதகம் ஏற்படாதவாறு சர்வதேச சமூகத்தோடு உறவினைப் கொண்டுநடத்துகின்றது. போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு ஓர் நீதிமன்றினைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், காணாமல் போனோரைக் கண்டறிவதற்கான ஓர் அலுவலகத்தை தாபித்தல், தகவல் அறியும் சட்டத்தை நிறைவேற்றுதல், நல்லாட்சியை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் ஆகிய செயற்பாடுகளின் மூலம் அரசாங்கம் ஓரளவுக்கு சர்வதேச சமூகத்தின் நடவடிக்கையை பெற்றுக் கொள்வதில் வெற்றிபெற்றுள்ளது.

இவற்றோடு இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் விஷேட பண்புகளாக மேலும் சில அம்சங்களை சுட்டிக்காட்டலாம்.

❖ பொருளாதார இராஜதந்திர தொடர்புகள், வெளிநாட்டுக் கொள்கையின் மையமாக மாறியுள்ளது. இந்த வகையில் சர்வதேச வலுச்சமநிலை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வெளிநாட்டு கொள்கை, IMF, IBRD, WTO, IFC, WEF உடன் நெருக்கமான தொடர்புகளை பேணி வருகின்றது.

❖ சர்வதேச அரசியலின் அதிகார பலத்தினை தக்கவைத்துக் கொள்வதற்கு அமெரிக்கா, ஐரோப்பாவுடன் மேற்குலகு சார்ந்த தொடர்புகளை பேணிவருகின்றது. அதேநேரம் இந்தியாவுடனும் நெருங்கிய உறவுகளை தக்கவைத்துள்ளது.

❖ 2020 தற்போதைய அரசாங்கம் சீனா, இந்தியாவுடன் சிறந்த தொடர்புகளை பேணி வருவதுடன் வியட்நாம், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனும் தொடர்புகளை வளர்த்துக் கொண்டு செயற்படுகின்றது.

குறிப்பு:-

இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள குறிப்புக்கள் வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள கவனத்தில் கொள்ளவும். இங்கு தரம் 13 பாடதிட்டத்திலுள்ள அலகுகளில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பாட அலகு தொடர்பாக மேலதிகமாக மேலும் தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்த கால அரசியல், விஞ்ஞான வினாவிடை புத்தகம்
- புள்ளியிடும் திட்டம் - இலங்கை பரீட்சைத் திணைக்களம், G. C. E. (A/L) அரசறிவியல்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, தரம் 3 – தேசிய கல்வி நிறுவகம்.
- அரசறிவியல்

மாதிரி வினாக்கள்

1. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படை பண்புகள்
2. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்.
3. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிக்கும் காரணிகள்.
4. சுதந்திரத்தின் பின்னரான இலங்கை வெளியுறவுக் கொள்கையின் போக்குகள்.
5. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் பிரச்சினைகளும் சவால்களும்.

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்